# சிறப்பிதழ்



ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பர மாநந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார்தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யாரென்செய் வார்யம தூதருக்கே

- கந்தர் அலங்காரம்

SUPPLIMENT TO THIRUPPUGAZH - KANIYAMUDAM - 1998

With the Blessings of

# LORD SENTHIL ANDAVAN!



*May we all acquire knowledge and understanding;*

*May we all shun hatred and avoid mutual strifes;*

*May we all cultivate love and kindness in our hearts;*

*May we all derive spiritual solace and happiness;*

*May we all live in peace.*



# காணிக்கை

செந்திலாண்டவன் அருள் பெற்று அருணகிரிநாதரின் திருப்புகழ் முதலாய நூல்கள் மூலம் அன்பையும், அவிரோதத்தையும், அத்வைதத்தையும், ஆன்மிகத்தையும் மக்களின் மனத்தில் உணர்த்தும் வகையில் திருப்புகழ் திருப்பணியையே தனது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருக்கம் குருஜி திரு. ஏ.எஸ். ராகவன் அவர்களது 71வது பிறந்த நாளை "திருப்புகழ் குரு ஜெயந்தி ஸமிதி" என்னும் அமைப்பு இவ்வருடம் செப்டம்பர் 9,10 தேதிகளில் சென்னையிலுள்ள ஏ.வி.எம். ராஜேஸ்வரி கல்யாணமண்டபத்தில் "குருஜெயந்தி" விழாவாக மிகச் சிறந்த முறையிலே கொண்டாட இருக்கிறார்கள்.

இந்த ஜெயந்தி விழாவை "திருப்புகழ் குரு ஜெயந்தி ஸமிதி"யுடன் இணைந்து பங்கேற்றுச் சிறப்பிக்கும் வகையில் திருப்புகழ் அன்பர்கள் குருஜி ஏ.எஸ். ராகவன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புடன் ஜெயந்தி விழாவில் ஆன்மீகப் பெரியோர்களால், மற்றும் பல அறிஞர்கள், அன்பர்கள் அருளாளர்கள், குருஜிக்கு அளித்த ஆசிகளையும், வாழ்த்து மடல்களையும் இந்தத் திருப்புகழ் திருப்பணித் திருவிழாவின் சிறப்பு மலரிலே ஓர் இணைப்பாகத் தொகுத்து, தங்களது அன்பையும், பக்தியையும், பணிவு கலந்த வணக்கங்களுடன் அர்ப்பணிக்கின்றனர்.

श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम्, दक्षिणाम्नाय श्री शारदापीठम्, शृङ्गेरी



शृङ्गगिरिः ,
११-८-९८.

अस्मदत्यन्तप्रियशिष्य श्रीराघवार्यविषये नारायणस्मरणपुरस्सरं विरचिता आशिषस्समुल्लसन्तु ।

भवन्तः आबाल्यात् भगवति कार्तिकेये महतीं भक्तिमावहन्तः तद्भजननिरतास्सन्ति। श्री स्कन्दस्वामिभक्तश्रेष्ठेन अरुणगिरिनाथेन विरचितं कार्तिकेयस्तुतिरूपं द्रविडपद्यात्मकं तिरुप्पुगऴ् नाम्ना प्रथितं प्रबन्धं सम्यगभ्यस्य तस्य देशे सर्वत्र प्रचारं विदधानाः लोकानां चेतस्सु भगवद्भक्तिं अभिवर्धयन्ति । सर्वैरपि प्रीत्या व्यवहरन्तः तेषां आदर भाजनतामापद्यन्त । विशेषतः अस्मदाचार्य चरणानां अनुकम्पामवाप्य आत्मानं धन्यं व्यतन्वत ।

भवतामधुना सप्ततिहायनपूर्तिर्भवितेति , तदा महता वैभवेन मद्रपुर्यां विशिष्टाः कार्यक्रमा आयोजिता इति च विदित्वा नितरां मोदामहे।

श्री शारदाचन्द्रकलावतंसयोरसीमकृपापूरेण कार्यक्रमा इमे सुष्ठु सम्पद्यन्तां भवन्तश्च इत्थमेव भगवद्भक्तिं प्रचारयन्तः दीर्घायुरारोग्यादिभिः चिरमभिवर्धन्तामित्याशास्महे ।

इति नारायण स्मरणम् ,

भारतीतीर्थः

# வாழ்த்துரை

திருப்புகழ் ராகவன் அவர்கள் அருணகிரிநாதரின் மறுபிறவி. திருப்புகழ் பாடல்களை திறம்படப் போதிப்பதல்லாமல் பக்திமார்க்கத்தைப் பரப்பிய பெருமை அன்னாரைச் சாரும். திரு. ராகவன் அவர்களின் இடைவிடாச் சேவையின் பயனாக உலகத்தின் பல பகுதிகளில் திருப்புகழ் பஜனைகளும் பாடல் போதனைகளும் இன்று பரவியுள்ளது.

இளம்பிள்ளைவாதத்திலிருந்து திருச்செந்தூர் முருகனருளால் வருவிக்கப்பட்ட திரு. ராகவன் அவர்கள் கர்நாடக சங்கீதம் பயின்று பாண்டித்தியம் பெற்றவர். 500க்கு மேலாக திருப்புகழ் பாடல்களுக்கு நூற்றுக்கு அதிகமான ராகங்களில் இசை அமைத்த பெருமை கொண்டவர், 425 பாடல்களைத் தொகுத்து திருப்புகழ் இசை வழிபாடு இசை நாடாக்களை வழங்கி வீடுதோறும் திருப்புகழ் மணக்கச் செய்துள்ளது ஓர் அரும்பெரும் சேவையாகும்.

ஆதிசங்கரர் இயற்றிய விவேக சூடாமணி என்ற நூலில் உயர்ந்த குருவின் லட்சணங்களை விவரித்துள்ளார். பலவேதம் தேர்ந்தவர். பாவங்களைத் தீர்த்தவர்.

ஆசைகளால் மனம் குலையாதவர். பிரமநிலையில் ஒருமைப்பட்டு நெஞ்சினால் அந்த உணர்விலே வாழ்பவர் என்றெல்லாம் கூறியுள்ளார். அதைப்படிக்கின்றபொழுது குருஜீ என்று அன்புடன் அழைக்கப்படும் திரு. ராகவன் அவர்களுக்கு அப்பெயர் எவ்வளவு பொருத்தமானது என்று விளங்கும். போதிப்பவர் ஆசாரியர், ஆசான். ஆனால் அத்ம ஞானத்தை அறிந்து அந்த நிலையிலேயே வாழ்பவர் குருதேவர்.

குருஜி ராகவன் அவர்கள் ஆன்மீகத்தை வளர்க்கும் பணியை பல்லாண்டு, பல்லாண்டு புரிந்திட அன்புக்கடவுள் முருகன் அருள்வாராக.

**ஆர். வெங்கட்ராமன்,**
முன்னாள் பாரத ஜனாதிபதி.

- ஸ்ரீ பொங்கி ஸ்மரணம் (சா.மா. விரதமுகாம்) முகாம் தென்னாங்கூர் "திருப்புகழ் அன்பர்கள்" -சென்னை கிளைக்கு வெள்ளி தேதி 2-8-98 விழா வாழ்த்து & திருப்புகழ்த் தொண்டன், "பக்த்தி ரத்னா" - (புதுதில்லி) ப்ரம்மஸ்ரீ ஆ.ஸு. ராகவன் அவர்களுக்கு 71ஆம் பிறந்த நாள் (பீமரத ஸாந்த்தி) விழா நல்வாழ்த்து (10-9-98) (ஏ.வி.எம் ராஜேஸ்வரி கல்யாண மண்டபம், சென்னை) (ஆறுசீரடி ஆசிரிய விருத்தம்).

ஆ.ஸு. ரா கவன், நெல்லை ஆறுமுக மங்கலத்தில் அவத ரித்தான்,
பூஸுராள் மரபினார் புதுதில்லி போய்வாழ்வார், பூமி யின்மேல்
மீஸுராள் வழிபடுமெய்ச் செந்திலாண் டவற்கடிமை வேண்டிப் பூண்டார்
பாஸுரா நந்தர்பணி பராஸுக்த்தி பாலன் அருள் படைத்த தாலே.

இளம்பிள்ளை வாதத்தால் இளமையிலே இருகாலும் செயல், ழந்த
இளம்பிள்ளை, பெற்றோரால் இறைதிருச்சீ ரலைவாய் ஈஸுன் ஈஸைு
வளம்பிள்ளை முருகற்கே அர்ப்பணிக்கப் பெற்றுடையோன் வரத்தால் நோய்தீர்
உளம்பிள்ளை யாநாற்பான் நாளினில்முன் னேற்றமுற்றே உயர்வு பெற்று.

'ஸங்கீத பூஷணம்' வைத் தியநாத பாகவதர் தம்ஸாஸ்த் ரீய
ஸங்கீத ஸிக்ஷையையே ஷடுவருஷம் பயின்று, தம்முன் ஸுப்ரம் மண்யன்
ஸங்கீதக் கச்சேரி தான்மும்பை தனிற்செய்கால் தானும் சேர்ந்தே
இங்கீதக் கருநாடக கத்திசையில் தேர்ச்சிபெற்றே இடில்லி போய்ப்பின்.

அருணகிரி நாதர்அருள் திருப்புகழில் ஈடுபட்டே அதைப்பரப்பும்
தருணம் அதே என்று கண்டும் தன்வாழ்க்கைக் குறிக்கோளாம் தவமும் அஃதே
வருண(ம்)மத(ம்) ஆச்சிரம பேதமிலா தனைவர்க்கும் வழங்குவோம் செல்
வருணன்போல் சந்தத்தா ளத்திசையோ டதைப் பஜனை வாயி லாக.

என்று வாழ்க் கைக்குறிக்கோ ளாகஎடுத் துக்கொண்டே எவர்க்கும் போதித்
தன்றுமுதல் இன்றுவரைஅனைவர்க்கும் வகுப்புகளை ஆங்கெ டுத்துச்
சென்று தமிழ்த் திருப்புகழைப் பாரதத்தில், மேல் இதர தேயத்தெல்லாம்
நன்றுபரப் பியும்சீடர் பலர்உருவா கக்'குருஜி' நாமம் பெற்றார்.

ஸிருங்கேரிச் சங்கராச் சாரியார் அபிநவவித் தியாதீர்த் தப்பேர்
வருங்கேண்மை ஆச்சார்யாள் மலர்வாயால் 'திருப்புகழ்த்தொண் டனா'வ ழங்கத்
தருங்கேடில் விருதுபெற்றுக் கங்கைஇரு டிகேஸாம் ஸாமி நாமம்
ஒருங்கேசேர் ஸிவாநந்தாச் சிரமத்துத் தலைவர்சிதா நந்தா ஓர்ந்தே.

"பக்த்தரத்நா" என்றபட்டம் பாலிக்கப் பெற்றபக்த்தர், பாடிப் பாடி
முக்த்தர்களாப் பலரும்உய ஐந்நூற்றின் மேலான முழுப்பாக் கட்குச்
சக்த்திநிறை ராகதா ளங்களுடன் இசைஅமைத்துச் சாற்றித் தந்து
யுக்த்தமாய்த் "திருப்புகழ்அன் பர்கள்" அமைப் புருவாக்கிப் பதிவு றுத்தி.

நாற்பான்ஆண் டுகட்கும்மேல் திருப்புகழ்பா டும்பணியே நாட்டிற் செய்து
மேற்பால்தேவ் கோட்டைஸுந் தரராஜ ஐயங்கார், ம்ருதங்க வித்வான்
நோற்பாளர் ராம்நாத புரத்தீஸ்வ ரையர்இவர் நோக்கி ஊக்கம்
வேற்பாலன் திருவருளால் விழைந்துதவ வளர்ச்சிபெற்று மேன்மை உற்றோர்.

தில்லியிலும் மும்பையிலும் சென்னையிலும் கிளைகொள் திருப்புகழ்அன் பர்க்குப
பல்லியலும் பயில்பெந்த காளூராம் பங்களூர்ப் பதியின் கண்ணும்
சொல்லியபல் கிளைகளுண்டு வெளிநாட்டுத் தொடர்பும்உண்டு தொழும்பு செய்ய
டில்லியில்தான் தலைமைஅகம், ராகவனே தலைவர், சென்னை இருப்ப மைப்பு.

இருபானைந் தாண்டுநிறை வெள்ளிவிழாக் கொண்டாடும் இந்த ஆண்டில்
குருவாகிப் போதித்த குருஜிக்கோ எழுபதுஸம் கொளநி றைந்து
வருபீம ரதஸாந்த்தி மாவிழா நிகழ்கிறது: வளர்க! வாழ்க!
ஒருகோடி நூறாண்டாய் அவரும், அவர் அமைப்புகளும் உயர்க! பன்னுள்.

**- ஸாதுராம் ஸ்வாமிகள்.**

## ஓம் நமசிவாய வாழ்க.

கந்தனின் அருளால் நீடு காசினிமீது வாழ்க!
நெஞ்சிலே பக்தி யோடும்
நினைவிலே தூய்மை யோடும்
கொஞ்சிடும் தமிழில் வானக்
கொண்டலாய்ப் பாடல் தந்த
அஞ்சுக அருணை வள்ளல்
ஆருயிர் அனைத்தும் உற்ற
சஞ்சலம் தொலைவில் ஓடச்
சண்முக நெறியைச் சொன்னார்!
பண்ணோடு தாளம் கூட்டிப்
பாட்டிலே ஆழம் காட்டி
உண்மைகள் ஒளிர, நெஞ்சின்
உறுத்தல்கள் மறைய, இந்த
மண்ணிலே வாழும் மக்கள்
மகிழ்விலே ஆட நாளும்
திண்ணமாய்த் தொண்டு செய்த
திருவினர் அருணை நாதர்!
அவர்நமக் கியற்றித் தந்த
அற்புதப் பாட லெல்லாம்
நவநிதி என்று போற்றி
நாளெலாம் அயர்வில்லாமல்
புவனமுற் றொலிக்கு மாறு
புதுப்புதுப் பண்க ளாலே
உவகையோ டிசைத்தி ருக்கும்
உத்தமர் இராக வாதான்!
இந்தநாள் அந்த நல்லார்
எழுபதைத் தாண்டு கின்றார்!
செந்தமிழ் மாந்த ரெல்லாம்
திளைக்கிறார் வெள்ள இன்பில்!
சிந்தையில் மகிழ்ச்சி யோடு
திருப்புகழ்க் குருஜி யானார்
கந்தனின் அருளால் நீடு
காசினி மீது வாழ்க!
நாதன்தாள் வாழ்க!

**- சௌந்தரா கைலாசம்**

## குருஜியின் திருப்புகழ் தொண்டு

● கோடானுகோடி மக்கள் வாழும் இவ்வுலகில், ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் இறைவன் அருளில் பயனுள்ள சில கணங்களேனும் கிடைப்பதுண்டு.

ஆனால் குருஜி ஸ்ரீ ராகவனுக்கோ, வாழ்நாள் முழுவதுமே திருமுருகன் திருப்புகழுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பெரும்பேறு பெற்ற வாழ்க்கையாக அமைந்தது ஆச்சரியமானது.

எவ்வளவோ இன்னல்களுக்கும், இடையூறுகளுக்கும் நடுவே, அவற்றைத் தாங்கும் மன வலிமையும் திருமுருகன் அவருக்கு அருள்பாலித்தான்,

சுமார் இருபத்தைந்து வருடங்கள் முன்பு இராமநாதபுரம் ஈஸ்வர அய்யர் அழைப்பின் பேரில் டெல்லியில் குருஜியின் திருப்புகழ் பஜனையில் வயலின் இசைத்துப் பங்கு பெற்றேன்.

வையகம் முழுவதும் தேனும், பாலும் போல திருப்புகழ் அமுதை, இசையுடன் கலந்து, கோடிக்கணக்கான அன்பர்களுக்கு அளிப்பதையே தன்னுடைய வக்ஷியமாக அர்ப்பணித்துக் கொண்ட குருஜியின் தொண்டு, ஈடிணையற்றது. இதுவரை இல்லாததொன்று.

திருத்தவத்துறை (லால்குடி) எனும் தலம் அப்பர்பெருமான் திருஞானசம்பந்தர், மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தியாகராஜர் முதலாய மஹான்களின் பாடல் பெற்றதாகும்.

**அருணகிரிநாதர் இத்திருத்தவத்துறையில் இரண்டு திருப்புகழ் பாடல்கள் இயற்றியுள்ளார். அருகே ஒரு மைல் தொலைவிலுள்ள திருமாந்துறை, பூவாளூர் ஆகிய தலங்களும் திருப்புகழ்ப் பாடல்களைப் பெற்றுள்ளன என்பது ஆச்சர்யமே!**

**லால்குடி திருப்புகழில் அவ்வூருக்குப் பெருமை அளிக்கும் மூன்று விசேடங்களையும் அழகுறப் பாடியுள்ளார். அருணகிரியார்,**

திரைக்க டற்பொரு காவிரி மாநதி

பெருக்கெடுத்துமெ பாய்வள நீர்பொலி
செழித்த நெற்செநெல்வாரிக ளேகுவை
குவையாக

செருக்கு செய்ப்பதி வாழ்முரு காஅறம்

வளர்த்த நித்யகல் யாணிக்கு பாகரி

திருத்த வத்துறை மாநகர் தானுறை பெருமாளே

71ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் குருஜியின் விழாவும், அன்னாரின் திருப்புகழ்த் தொண்டின் 40ம் ஆண்டு விழாவும், சென்னைக் கிளையின் வெள்ளி விழாவும் ஒருங்கிணைந்த மகிழ்வான நிகழ்ச்சியில் பங்கேற்கும் வாய்ப்புக்கிட்டியது இறைவன் திருவருளே,

வாழ்க குருஜியின் தொண்டு!

வளர்க திருப்புகழ் கிளைகள்!

**- லால்குடி ஜி. ஜெயராமன்.**

## அர்ப்பணம்

● குன்றக் குமரனின் புகழ் பாடும் திருப்புகழை
ருசிமிக்க நல்விருந்தாய் எமக்கீந்த
எம்தலைவா!
ராகநயம் மாறாமல் பாக்களை
இசைப்படுத்தி
கந்தனுடன் எம்மையும் களிப்படைய
செய்தனையே!
வடிவேலன் புகழ்ந்தன்னை பாரெல்லாம்
பரப்பிய நீ
என்றும் இளமையுடன் வாழவே பல்லாண்டு
வாழியவே!

அண்ணல் அருணகிரி அளித்த
நல்திருப்புகழை
அகில உலகமெலாம் பரப்ப உனைப்
பணித்தானோ!
சொற்கோவை சிதையாமல் பொருள்நயம்
குன்றாமல்

இன்னிசையில் சுரப்படுத்த ஈசன் உனைப் படைத்தானோ!
பாலன் புகழ்பாடி சிவப்பழமாய் நிற்கும் நீ
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழியவே!

குருநாதன் புகழ்பாடும் அன்பர்குழாம் தனைத்திரட்டி
திருப்புகழ் அன்பறெனும் திருநாமம் தனைச்சூட்டி
திக்கெட்டும் தீஞ்சுவையாம் திருப்புகழ் மணம்பரப்பி
எண்ணற்ற அன்பர்களின் இதயத்தில் கொலுவிருந்து
மயங்கிநிற்கும் மக்களுக்கு வழிகாட்டும் கலங்கரையாய்
நெடிதுயர்ந்து நிற்பவனே பல்லாண்டு வாழியவே!

நீ இருக்கும் காலத்தில் உன்னுடனே யாமிருக்க
என்னதவம் செய்தோமோ! எம் குருவே! எம் துணையே!
ஊனக் கண் கொண்ட மாக்களாம் எங்களுக்கு
ஞானக்கண் தந்து நல்வழி காட்டினையே
முருகனுடன் ஒன்றறக் கலந்து நிற்கும் எம் குருவே!
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழியவே!

**டாக்டர் : சாரதா ரமணி**

● அறுமுருகன் புகழ் பாட அசராதவன்
திருப்புகழுக் கிசை சேர்த்த மாசாதகன்
திருச்செந்தூர் தீரனே கதி யென்பவன்
முருகனின் புகழ் பரப்பும் பணி யேற்றவன்
மனமுருக இசை பாடும் குணக் குன்றவன்
திருப்புகழ் அன்பர்க்கு உயிரானவன்
திருமுருக பக்தியே சாறானவன்
அறுமுகன் புகழ்பாட அசராதவன்
ஆறுமுகமங்கலத்து ஸ்ரீராகவன்,

வாங்கல் முத்து,
டொரொண்டோ - கனடா

## ஸ்ரீ ராம ஜெயம்
## ராகவ நவமணி மாலை

ஆன்பாலை வேண்டார்: அமுதத்தை இச்சியார்:
தேன்பாவும் மாங்கனியைச் சிந்தியார் - வான்பாவு
கங்கைபோல், காவிரிபோல், கண்ணாய ராகவனார்
இங்கிசைப்பக் கேட்டோர் இனி.

தொண்டர் திருவுளமோ? தூயதனி நான்மறையோ?
வண்டரற்றும் கூந்தல் மகிழ்பரணோ? - தண்டமிழாய்
மாசகன்ற ராகவனார் மாண்பார் திருப்புகழை
ஈசன்சேய் கேட்கும் இடம்.

வள்ளி இசைத்தாளோ? மாமறைகள் தந்ததோ?
தெள்ளிய நாரதனார் செப்பினரோ? - ஒள்ளியசீர்
பாகெல்லாம் தோற்றுப் பதுங்கநம் ராகவனார்
மோகனமாய்ப் பாடும் முறை.

பற்றுடைய செந்தில் பரமன் உளத்தெழுந்து
அற்றமிலாப்பத்தி அருவிகுளித் - துற்றதோ?
நீடுபுகழ் சூழவொளிர் நேயமுறு ராகவனார்
பாடுபுகழ் தெய்வநலப் பண்.

கல்லும் உருகுமடா: கானம் செழிக்குமடா!
புல்லும்கண் ணீரைப் பொழியுமடா! - மல்லலுறும்
ஆறுமுக மங்கலத்தார் ஆறுமுகன் பண்பாடின்
வேறுமுகம் உண்டோ விளம்பு.

பண்ணின் தவப்பயனோ? பாவின் தவப்பயனோ?
மண்ணின் தவப்பயனோ? மற்றவையோ? - கண்ணின்
மணியொத்த ராகவனார் மாண்பால் இசைக்கும்
இணையற்ற சந்த இசை.

எங்கும்வே லாயுதமாம் எங்கும் மயில்மயமாம்
எங்கும்நம் செந்தில் இலங்குமாம் -
எங்கணுமார்
அண்ணல் திருப்புகழை அன்பால்நம்
ராகவனார்
எண்ணி இசைக்கும் இடத்து.

ஆணவம்போம் கன்மம்போம் ஆட்டுகின்ற
மாயைபோம்
காணரிய பொல்லாக் கவலைபோம் -
மாணமரும்
காரணன் மெய்ப்புகழை கண்போன்ற
ராகவனார்
பூரணமாய்ப் பாடும் பொழுது.

கந்தன் புகழ்வளரக் கண்ணன் புகழ்வளரப்
புந்தியமர் ஈசன் புகழ்வளரச் - சந்ததமும்
மன்னும் திருப்புகழ்ப்போல் மாண்பார்ந்த
ராகவரே!
இன்னுமொரு நூற்றாண் டிரும்.

கம்பன் இல்லம் அன்புடன்
எப்ஸிலாண்டி **இராமராஜன்**

● "அரஹர வேல்மயில் என்பர் எல்லார்க்கும்
அடியேன்
ஆலயநற் றிருத்தொண்டர் அனைவர்க்கும்
அடியேன்
முருகனையே பாடுவார் எல்லோருக்கும்
அடியேன்
முத்திநிலையைப் பெற நாடி நித்த முருகையன்

திருவருளைச் சிந்திப்பார் அனைவர்க்கும்
அடியேன்
திருத்தணியில் பிறந்தவர்கள் எல்லோர்க்கும்
அடியேன்
இருகநிரை புறங்காணும் அழகு சுடர் வண்ணத்
தெம்மான் திருத்தணிகை அம்மானுக்கு ஆளே!

குகனேறியப்பர்தம் அடியார்க்கும் அடியேன்
குறைவிலருள் குருஜி இராகவனுக்கு அடியேன்
பெருமை யுறு திருப்புகழ் அன்பர்க்கும்
அடியேன்
என்று பாடிமகிழும்படியாக

குறைவிலா நிறைவாய் கோதிலா அமுதாய்
மாசிலா மணியாய், எனதுளமும் புறமும்
திமிரமலமொழிய தினகரனென வரு
பெருவாழ்வை திருச்செந்தலாதிபனைப்

போற்றி அவனைப் போற்றும் இராகவப்
பெரும் புகழை வளர்மதியைப்போல்
வாழ்க நூற்றாண்டு என எம்மான் திருத்தாள்
பணிந்து வாழ்த்தும்.

**செந்தில் துறவி**

Sangita Kala Acharya
**T.S. PARTHASARATHY**

## MESSAGE

It was in 1966 that I first heard Guruji Raghavan's rendering of Tiruppugazh. I had just joined the Northern Railway at New Delhi when the Tiruppugazh Anbargal invited me for the Bhajan. Therewas a staggering audience of nearly 1000 in which there were morewomen than men. Guruji sang for about three hours that moved the list eners to tears.

On 15-8-67 Tiruppugazh Anbargal celebrated the Arunagirinatha Day in my bungalow in Connaught Circus. Guruji sat down to sing at 7 A.M. and finished at 2 P.M. He neither got up norhad even a drop of water. I could see tears flowing from his eyes every now and then. About three hundred devotees had lunch at my place after the bhajan.

After a long gap I met him at Bangalore on 2-9-88 where the Tiruppugazh Anbargal of the Karnataka Region had arranged a Tiruppugazh Vaibhavam for three days. The function coincided with the celebration of Guruji's Shashtyabdha Purti at Sringeri two days earlier. It was another grand show like the one at New Delhi in 1967. I gave a talk on 'Tiruppugazhil Chandam' on 3-9-88. Tiruppugazh Anbargal brought out on the occasion a precious souvenir called 'Tiruppugazh Karuvoolam'.

In 1993 I had the privilige of editing, for the Irai Pani Manram', Tambaram, a rare book called '108 Tala Tiruppugazh'. I contacted nearly 20 scholars who had rendered yeoman service to popularizing Tiruppugazh. But Guruji's services are totally different. He is the only one who started a movement (iyakkam) to propagate, not only the Tiruppugazh, but also the other works of Arunagirinatha like Vel Viruttam and Mayil Viruttam which have no inherent chandam in them. He has trained hundreds of men, women and children to sing in chorus more then 500 songs set by himself in 100 different ragas.

The Tiruppugazh movement has crossed the boundaries of India and has taken root in Canada, Malaysia and other countries. In India all the major cities have Tiruppugazh groups to keep up the tradition.

I feel it my privilege to participate in this function in which the 71st birthday of Guruji is being celebrated. I wish to join every one of you in wishing him many more years of good health, peace of mind and continued service to the propagation of the works of Arunagirinatha.

# GURUJI - A PROFILE

**SRI D. KRISHNA AYYAR**

**President, Thiruppugazh Guru Jayanthi Samithi**

**गुरुर्ब्रह्मा गुरुर्विष्णु : गुरुर्देवो महेश्वरः ।**
**गुरुः साक्षात्परं ब्रह्म तस्मै श्रीगुरवे नमः ।।**

**"Dharma Samsthapanarthaya Sambhavami yuge yuge".**

When Dharma is in grave danger of being completely annihilated, Avtars appear. But not alone in such cataclysmic times does dharma require support. Even in intervening periods, Dharma has to be revived from time to time, by prophets, sages, savants and teachers. Of these there are theologians and philosophers who stride the realm in majesty and splendour and compose immortal works expounding and interpreting the original scriptures (Sutras, Bhashyas, Vartikas, Prakarana Granthas, Prabhandas etc.) in their own unique style and with such powerof poetic beauty and depth of meaning that it makes the people discard the futile path of material aggrandisement and turn their attention to the spiritual path. But there are also others who may not themselves compose such works but who teach the original scripture, the explantory commentaries, works discussing various aspects of the original scripture, called 'prakarana granthas' and devotional literature based on the scripture and thereby inculcate in the people moral principles and values of life and propogate the spiritual way of life.

Saint Arunagirinathar appeard in the 14th century and gave to the world the spiritual beacon called Thiruppgazh. Thiruppughazh is believed to have consisted originally of 16000 verses of which 1329 (collected by Va. Tha. Subramania Pillai from various villages and published by Chengalvaraya Pillai) are extant. Kandaranubhuti., Thiru Vaguppu and Thiru Ezhukkoottrirukkai are the famous immortal works of Saint Arunagirinathar. (For convenience, all the works of Arunagirinathar would hereafter be referred to as Thiruppugazh, except where the particular text is specifically mentioned; the text of the particular set of songs popularly known as Thiruppugazh, will be referred to as "The Tiruppugazh"). The ragas and the rendition of Thirupugazh songs in which Arunagirinathar must have sung the praise of the Lord are not available to us, but the 'chandas' (the rhythmic patterns) are available. Vallimalai Swamigal and Kanjeepuram Nayana Pillai were the pioneers in setting to tune the Thiruppugazh songs. There after various musicians, a few choral groups and pravachanakartas began singing Thiruppugazh songs and a few others set to tune a few more songs. But together, they all added up to only about 100

songs.

Thiruppugazh songs teach oneness with the nondual self effulgent infinite Supreme Principle ("Sacchidananda") as the goal of life and describe in poetic profusion the glories of Saguna Brahman in the form of Lord Suhbramanya. They also lay great stress on virtues and values of life.

Thiruppugazh is ever a treasure for those who are inclined and have the capacity to set the verses to musical modes. Of these, one who has done outstanding work in this field in our time is Sri A.S. Raghavan, affectionately and reverently called Guruji by the countless disciples who have been fortunate enough to learn Thiruppugazh under his tutelage or that of his disciples, who, in turn, have become teachers themselves. To him not only do we owe a repertoire of about 450 Thiruppugazh songs, but a movement of teaching of Thiruppugazh songs in regular classes to one and all who are interested throughout the length and breadth of India and also in various centres in U.K., U.S.A., and Canada. He has also set to tune in attractive ragas, Abhirami Andhadi and Abhirami Pathikam. As far as teaching Thiruppugazh to non-musicians and laymen is concerned, he is the pioneer. This has been a labour of love on his part and on the part of his students who have become teachers. Countless devotees have been able to learn to sing Thiruppugazh songs at no cost. Guruji's dedication to the cause and his attitude of Saranagati to the Lord which have enabled him to carry on the mission, come wind come weather, is well known in Thiruppugazh circles.

Guruji was born in the consellation of Bharani on 4.9.1928 (Kollam era 1104) as the second son of Subbaiyer, known as Subbaiya Sastrigal and Ramalakshmi Ammalat Tutiorin in Tirunelvel District of Tamil Nadu. Guruji's grandfather was Subbayya Sastrigal, who was well known for his musical discourses covering Valmiki Ramayana. Guruji's paternal uncle, Krishnaiyer, was well known for his musical discourses covering Ramanatakam, a Tamil musical classic.

A physical affliction at the age of six which was eventually, cured as if it was a miracle, had led the parents to surrender the child to Lord Suhbramnya at Thiruchendur. From that very momnent, the child became the vehicle of the Lord's will and the repository of His Grace. Even as a boy, Guruji's mind was dwelling on the Lord and was preoccupied with spiritual quest. A talent for music also was evident.

Financial constraints took the young man, Raghavan, to seek a job at Mumbai. But even the compulsion of earning a living did nothing to whittle down his interest in matters spiritual and musical. On the other hand, in an atmosphere of broader facilities in an area of South Indian community, the interest became more intense. We can have no doubt that interest in matters spiritual and in music was in the blood. Looking back on

Guruji's career, we cannot but conclude that there was plenty of Purva Janma equipment which served as the launching pad for his mission as a great teacher of Thiruppugazh.

While he was at Bombay, Sri Raghavan underwent training in classical carnatic music under Sangeeta Bhooshanam Vaidyanatha Bhagavathar and Gana Bhooshanam Vaidyanatha Bhagavathar for about six years. Later Sri Raghavan took up a job at New Delhi. Here, at that time, there was a comparatively small but closely knit South Indian community which ws intent on preserving the cultural traditions of South India, while at the same time participating in the activities and cultural functions of the North and as such was highly respected by local residents and emigrants from other regions of India. At New Delhi Sri Raghavan had musical tuition under Kadayam Krishnamurthi Bhagavathar, and Alathur Venkatesa Bhagavathar (disciple of Alathur Brothers). In that period, Sri Raghavan used to take part in Harikatha Kalakshepams and Bhajans, Tyagraja festivals, Muthuswamy Dikshitar festivals and Shyama Sastri festivals along with professional artistes. He used to render Pancharatna Kirtanas along with stalwarts like Madirimangalam Ramachandran and Krishnamurthi Bhagavathar. Regular musical concerts of Sri Raghavan were also held in various Sabhas. His rendering of difficult Pallavis earned him the admiration of front rank musicians like Devakottai Sundararaja Iyengar. In order to attain greater proficiency in rythmic patterns (Laya Jnanam), Sri Raghavan took part in the backstage rendering for dance recitals. He also acted in dramas. One of the roles which was greatly applauded was that of Thirunavukkarasar.

But mere music did not give the kind of happiness and peace that Guruji's mind was seeking. The mind continued to be engaged in the fundamental question which all "Yogabrashtas" ponder over.

The musical training, as is the norm comprised kritis of Saint Tyagraja, Muthuswami Dikshitar and Shyama Sastri. Besides, in the course of musical training, Sri Raghavan also learnt some Thiruppugazh songs. It so happened that two friends who were interested in Thirupugazh, Sri Narayanan and Sri. Mahalingam, wanted to learn the songs from Sri Raghavan. So he began teaching them the songs that he himself had learnt. This was the turning point in his life whih converted a mere musician into a bard singing the praise of the Lord. From then on, Guruji's life became a mission of propagating Thiruppugazh.

In the course of teaching the two friends, Sri Raghavan began looking for more songs to teach. This prompted him to delve extensively and deeply into Thiruppugazh. The published works just gave an outline on the rhthmic patterns and no indication of the ragas or the mode of rendition of the songs. But the Grace of the Lord was so abundant that the moment Guruji went through a verse, the appropriate raga and tala and the mode

of rendering flashed in his mind and with his proficiency in music, he was able to set it to tune in such a way that while the musical part was attractive, the chandam and diction were in tact and the poetic beauty and spiritual message were brought out in full measure. It is thus that he has set to tune 460 songs in more than 100 ragas.

Regular Thiruppugazh classes were first held in various centres at New Delhi. In due course, persons holding transferable jobs or seeking alternative jobs went to other cities and towns in India and a few went abroad to U.K., U.S.A., and Canada. And the advanced disciples became teachers. Thus the Thiruppugazh movement spread far and wide. Though mainly contiunuing to teach at New Delhi, Guruji undertook tours to other centres in India and abroad to conduct refresher courses and to teach new songs. Thus Thiruppugazh now has centres or Chapters, not only in New Delhi but in Chennai, Mumbai, Calcutta, Bangalore, Coimbatore, Tiruchirappalli, Chicago, Los Angeles, Baltimore, Maryland and Houston. Thiruppugazh "Isai Vazhipadu"s are held at various temples in India and abroad on occasions connected with traditional days and festivals pertaining to Lord Subramanya. Thus, what started as regular free classes in one or two centres at New Delhi has become a worldwide movement. The number of students, past and present, have to be counted in thousands. The beauty is that most of them are people with no or very little musical training but any one listening to a group of students singing the songs in an Isai Vazhipadu session will not only marvel at the "naada inbam" but will be enchanted by the spiritual vibration produced by the choral rendering surcharged with "Bhava". This kind of movement has come into being only because the Lord has bestowed His Grace on Guruji and ever remains his inner voice.

Encomiums for Guruji's mission have been received from various savants, saints, sages and devotees. Swami Chidandanda has conferred the title of "Bhakti Ratna". Sacchidananda Vaillimalai Swamigal Sabhai has conferred the title of "Chanda Tilakam". His Holiness Late Abhinava Vidyatheertha Swamigal of Sringeri Mutt has conferred the title of "Thiruppugazh Tondan". Srimukhams have been received on special occasions from the Sankaracharyas of Sringeri Sarada Peetham and Kanchi Kamakoti Peetham. Appreciation of Guruji's services have been received from savants and sages like Arutkavi, Thava Thiru Sadhuram Swamigal, Tirumuruga Kripananda Variar and Vageesa Kalanidhi K.V. Jagannathan and from various Thiruppugazh and Tamil research institutions.

A teacher of devotional music of this range of influene and depth of devotion is unique in the present age. The initial attraction of Guruji's class, for many, is the music. But once one sits and learns the songs under him or participates in the Thiruppugazh Isai Vazhipadu session in temples etc., one is drawn into the bhava of the songs and there comes a stage when the singer and the singing disappear and the song is tansformed into

silence. It is then that one can feel the presence of the Lord inthe depths of one's heart. Because when Guruji leads he is complete absorbed in the Lord and the spiritual vibration is transmitted to the disciples. Occasions are many when Guruji's absorption becomes so intense and the ecstasy so deep that his singing stops and he is so deeply one with the Lord and in that momnent of ecstasy tears flow down his cheeks. From time to time, Guruji explains the meaning of the songs. When it comes to Tattvam, what it takes a whole lecture for others, Guruji can transmit in a few words. His stress is on Sarvaatmabhaava ("anbu" and "avirodham") which is the highest stage a Vedantin attains.

As a person, Guruji leads a simple life of spiritual pursuit. Guruji has assimilated the essence of Vedanta philosophy so thoroughly that while saying "Aham Brahmasmi", he can happily do Sashtanga Namaskaram to the Lord. We sing "Enathi yanum verahi evarum yathum yanahum idaya bhavanateetam arulvaye". This evocative appeal in the saint's words to the Lord reflects Guruji;s state of mind also.

❄

# மின்சார சக்தி

- தாரா கிருஷ்ணன்

சூரியனைப் பற்றி ஒரு கட்டுரை எழுதவேண்டுமானால், முதலில் நினைவுக்கு வருவது எது? "பிரகாசம்" தானே? எவ்வளவோ எழுதிக்கொண்டே போகலாம். சூரியன் இல்லாவிட்டால் வெளிச்சமேயின்றி, உலகம் இருளில் மூழ்கிவிடும்: புல், பூச்சி, புழுவிலிருந்து மரம், செடி, கொடி, மிருகம், மனிதன் - எதுவுமே உயிர் வாழ முடியாது - இப்படியே முடிவின்றி எழுதிக் கொண்டே போகலாம். "சூரியனின்றி உலக இயக்கமே நின்றுவிடும்" என்ற ஒரே வாக்கியத்தில் முடித்து விடலாமே! இதேபோல்தான், நம் மதிப்பிற்குரிய குருஜியைப்பற்றி எழுதுவதும், கோடான கோடிக்கணக்கான பல்புகள் இருந்தாலும் "மின்சாரம்" என்ற சக்தியை செலுத்தினாலொழிய அவைகளில் ப்ரகாசம் ஏற்படாது. இந்த மின்சார சக்திதான் நம் குருஜி. எத்தனையோ காலமாக உலகத்தில் திருப்புகழ் இருந்து கொண்டுதான் இருக்கிறது. பலர், அந்தப் பாடல்களை, பலவிதமாகப் பாடியும் இருக்கிறார்கள். ஆனால் குருஜியின் பாணியே அலாதியானது. சந்தத் தாளங்களில் கருத்துக் குலையாமல் வார்த்தைகளைப் பிரித்து உள்ளத்தைக் கவரும் பல ராகங்களில் அமைத்து, சங்கீதமே - ஏன், பாஷையே தெரியாத பலர் மனத்தை உருக்கி, கண்களில் தாரை தாரையாக நீர் பெருகும் அளவிற்கு அந்தப் பாடல்கள் அமைந்துள்ளன. பாட்டை அமைப்பதுடன் நிற்கவில்லை. பலதரப்பட்டவர்களுக்கும் அன்போடு புகட்டி - ஆமாம், பாலாடையில் ஒரு அம்மா குழந்தைக்குப் பால் புகட்டுவது போல் - எங்கள் (மர) மண்டையில் ஏற்றி, பாடவும் வைத்து, பல தாளங்களைப் பயமில்லாமல் போடவைத்து, "திருப்புகழ் அன்பர்கள்", என்றும் பெயரையும் சூட்டினாரே! என்னவென்று சொல்வது? எழுதுவது? உலகில் எந்த மூலைக்குப் போனாலும் நாலு அன்பர்கள் நம் மீது அன்பைப் பொழியகாத்திருக்கிறார்கள். இப்படி, இன்று உலகம் முழுவதிலும் ஒரே ராகத்தில் திருப்புகழ் முழங்குகிறது என்றால் எதனால்? அந்த சக்தி, குருஜியினால் தான்,

இந்த முறை குருஜியின் வட அமெரிக்க சுற்றுப் பிரயாணத்தில் அவர் கனடாவுக்கு விஜயம் செய்ய இயலவில்லை. எங்கள் துர்பாக்கியம்தான். மகமது மலைக்கு வராவிட்டால் என்ன? மலையாகத் திரண்டு, நாங்கள் சுமார் 30 பேர் டெட்ராய்டுக்கு போய் அவருடன் சேர்ந்து பஜனையில் பாடும் வாய்ப்பை அந்த ஆண்டவன் ஏற்பாடு செய்து கொடுத்ததில் எங்கள் -களை நன்றாக -பண்ணிக்கொண்டு வர முடிந்தது.

அவருடைய 70வது வயது கொண்டாட்டம், சென்னை வெள்ளிவிழா, திருப்புகழ் இயக்கத்தின் 40வது ஆண்டு விழா - இந்த அற்புத விழாக்களில் நேரில் பங்கு கொள்ள இயலாவிட்டாலும்., எங்கள் மனதெல்லாம் அங்குதானிருக்கும். "பரணி தரணியாளும்" என்பது பழமொழி. பரணி நட்சத்திரத்தில் பிறந்த நம் குருஜி உண்மையிலேயே தரணியைத் தன் அன்பினால் ஆளப்பிறந்திருக்கிறார் என்பதில் ஐயமில்லை. ஆண்டவன் அவருக்கும், அவருடன் எப்பொழுதும் நிழலாக இருந்து பணிவிடை செய்யும் மாமிக்கும் (ராகவன்-ஜானகி என்ன பெயர் பொருத்தம்!) நீண்ட ஆயுளையும் தேக ஆரோக்யத்தையும் கொடுத்து, தொடர்ந்து இந்த தெய்வீகப் பணியை செய்யுமாறு ப்ரார்த்தனை செய்து கொண்டு முடிக்கிறேன்.

# வழிபாடு தந்த வழிகாட்டி

**இராகவ எஸ். மணி, கேம்ப்ரிட்ஜ், ஆண்டேரியோ, கனடா**

"மாதா, பிதா, குரு, தெய்வம்" என்னும் சொற்றொடரில் மாதாவை முன் வைத்து தெய்வத்தைக் கடை வைத்ததற்குக் காரணம், இந்த நான்கில் மாதாவே தலையானவள் என்றும், அன்னை, தந்தை, ஆசான், மூவருக்கும் பிறகே தெய்வத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறுவது வழக்கம்.

இங்கே குருவினுடைய ஸ்தானம் கவனிக்கத் தக்கது. ஒரு பக்கம் இவ்வுலக அறிவையும் மறுபக்கம் பர உலக ஞானத்தையும் இணைத்து நிற்கும் குரு இல்லாமல் தெய்வத்தை எப்படி அடைய முடியும்? பாலம் இல்லாமல் மறுகரைக்குப் போக முடியுமா? ஓடமில்லாமல் சாகரத்தைத் தாண்ட இயலுமா?

இறைவனை அடையும் வழியைக் காட்டுபவரே குரு. அஞ்ஞான இருளைப் போக்கி, ஞான ஒளியில் நீராட்டுபவரே ஆசான்.

இறைவனை அடைய எவ்வளவோ வழிகள் உண்டு. அவைகளில் நாதோபாசனையான இசை வழிபாடு பெரும்பாலோருக்கு எளிதாக இருக்கும்.

"ஆடும் பரி, வேல், அணிசேவல் எனப்

பாடும் பணியே பணியாய் அருள்வாய்!"

என திரு அருணகிரிநாதரே அறுமுகனிடம் வேண்டினார்! முருகனின் அருள்பெற்று, அவன் திருப்புகழைப் பாடி, பலபாடல்களை உலகுக்கும் அளித்தார்.

செஞ்சொல் மாலையாம் திருப்புகழை அருணகிரி எவ்வாறு இசைத்திருப்பாரோ என்று நாம் திகைக்காமல் இருக்க, பாடல்களுக்கு மெட்டமைத்து, பாலில் ஊறிய பழத்தைத் தேனில் தோய்த்துத் தருவதுபோல 'திருப்புகழ் இசை வழிபாட்'டை வகுத்துள்ள நமது குருஜி இராகவன் திரு அருணகிரி நாதரின் அம்சமே என்பதில் ஐயம் உண்டோ?

இத்தகைய இசை வழிபாட்டை நமக்களித்த வழிகாட்டி குருஜி திரு. இராகவன் அவர்களை இன்னும் பல்லாண்டு வாழவைத்து திருப்புகழ் அன்பர்களை மகிழ்விக்கும்படி திருத்தணி தீரனை, செந்தூர் அழகனை, அண்டினோரை ஆதரிக்கும் அறுமுகனை மனமுருக வேண்டுகிறேன்.

# அமெரிக்காவில் குருஜியின் திருப்புகழ்பணி

ர.வெ.துரை

பொருள் தேடிப்பொன் குவிந்து அவன் அருள்வேண்டி ஆலயங்கள் அமைத்து அற்நெறியைக் கடைப்பிடித்து வாழும் தமிழர் இன்று அமெரிக்காவில் ஏராளம். இறை வழிபாடுகளும் இந்து சமயத் திருவிழாக்களும் குறைவில்லாமல் நடத்தி தமிழ்மக்கள் ஆன்மீக வளர்ச்சியில் பெரிதும் ஈடுபட்டு இங்கு அமைதி பெற்று வாழ்வது கண்கூடு.

இத்தகையவர் குருஜியின் திருப்புகழ் பணிக்கு எப்படிப்பட்ட வரவேற்பு அளித்திருப்பார்கள் என்பதைக் கூறத்தேவையில்லை. அன்பர்கள் காட்டிய ஆதரவுக்கு அளவில்லை. எங்கள் சிகாகோ திருப்புகழ் உறுப்பினர் திரு. சுந்தர் அவர்கள் 1997 ஜூன் மாதம் இந்தியா சென்றிருந்தபோது குருஜியுடன் தொடர்பு கொண்டு குருஜி அமெரிக்கா விஜயம் செய்யவும், அங்குவாழ் தமிழர்களிடையே திருப்புகழ்பெருமை பரப்பவும் சிகாகோ கந்த ஷஷ்டி விழாவின் அங்கமாக தமிழ் இசையில் வள்ளி திருமண விழாவொன்றையும் நடத்துவதாகவும் உறுதிசெய்து கொண்டு திரும்பினார். விபரத்தை மற்ற நகரங்களில் வாழும் அன்பர்களிடம் கூறினார். முக்கியமாக நியூயார்க் நகரத்தில் அன்பர் நடராஜன், மேற்கே 2500 மைல்கள் தொலைவில் சான்ப்ரான்சிஸ்கோவில் சேது ரத்னம், பால்டிமோரில் கிருஷ்ணஸ்வாமி லாஸ் ஆஞ்சலிஸில் சுப்பிரமணியம் என்று இவர்கள் குருஜியின் வருகைக்குப் பெரிதும் ஊக்கம் அளித்து ஆங்காங்கே குருஜி திருப்புகழ் ஆராதனைகளும் பயிற்சி வகுப்புகள் நடத்தவும் எல்லா வசதிகளும் செய்து தருவதாகவும் உறுதி அளித்தனர்.

குருஜியுடன் அவரது மனைவி திருமதி. ஜானகி அவர்களும் வருவதாகத்தான் ஏற்பாடு. குருஜி ஜூலை மாதத் தொடக்கத்தில் கெனக்டிகெட்டில் மகள் மாலினி அவர்களின் இல்லத்தில் வந்திறங்குவதாகப் பயணத்திட்டம். பெற்றோர் வருகையில் பேருவகையுற்றவாறு மாலினியும் அவரது கணவர் ராமகிருஷ்ணன் அவர்களும் குருஜியின் பயணத்திற்கும் அவரது ஆராதனை மற்றும் பயிற்சி வகுப்புகளும் நடைபெறப் பேருதவி செய்தனர் என்பதை நன்றியுடன் நினைவுகூர்கிறோம். பிரயாண அலுப்பும் நிகழ்ச்சிகளும் குருஜியின் உடல் நலத்தைப் பாதிக்காத வகையில் இடைவெளியும் ஓய்வும் கொடுத்து பயணத்திட்டம் வகுக்கப்பட்டது. ஆயினும் பற்பல நகரங்களிலிருந்து அன்பர்கள் விடுத்த வேண்டுகோள்களுக்கும் செவிசாய்த்தபடி ஜூலை 9ஆம் தேதி குருஜி வந்திறங்கியது முதல் நவம்பர் 14ஆம் தேதி வரை கூடிய வரையில் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்து கொடுத்தோம்.

குருஜி ஜூலை 9ஆம் தேதி கெனக்டிகெட் வந்திறங்கினார். தன் பேரக் குழந்தைகளைக் கண்டு மனம் களித்தார்.

குருஜியின் முதல் திருப்புகழ் வழிபாடும் ஆராதனையும் ஜூலை 13ஆம் தேதி நியூயார்க் ப்ளஷ்ஷிங் விநாயகப் பெருமான் ஆலயத்தில் நடந்தது. அன்றையதினம் அங்கு வீற்றிருக்கும் முருகனுக்கொரு முத்தலங்காரம் - குருஜியும் முத்து முத்தாக திருப்புகழ் பாமாலை ஒன்றைத் தொடுத்து அந்த முத்தையனுக்கு இசைமாலை அணிவித்து மகிழ்ந்தார். ஆலயத்தின் அடித்தளத்தில்

உள்ள அரங்கத்தில்தான் பஜனை நடந்தது. மூர்த்திக்காக தண்டபாணி என்ற அன்பர் தன் வீட்டிலிருந்து முருகனின் மூர்த்தியைக் கொண்டுவந்து கொடுத்தார். குருஜி முருகனுக்குப் பட்டாடை சார்த்தி அலங்காரம் செய்து ஆராதனை நடத்தினார். வந்திருந்த அன்பர்கள் அனைவரும் ப.க்திஇசை வெள்ளத்தில் மூழ்கினர். குருஜியின் முதல் திருப்புகழ் ஆராதனை இனிமையாக வெற்றிகரமாக நிறைவேறியது.

ஜூலை 25ஆம் தேதியிலிருந்து 27ஆம் தேதி வரை குருஜியின் திருப்புகழ் இன்னிசையுடன் ஆராதனைகள் பால்டிமோரில் நடைபெற்றன. அதன் பிறகு ஆகஸ்டு 16ஆம் தேதி வடகரோலினா மாநிலத்தில் ராலே என்ற இடத்தில் பக்தர்கள் குருஜியின் தீந்தமிழ் திருப்புகழ் இசை ஆராதனையைக் கண்டு கேட்டு மகிழ்ந்தனர்.

ஆகஸ்டு 30ஆம் தேதி குருஜியின் வாழ்க்கையில் ஒரு பொன்னாள். அன்று தான் அவர் ஸ்ட்ரௌட்ஸ்பர்க் என்ற புண்ணிய பூமியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் அற்புதமாக திருப்புகழ் இசைபாடி முருகன் மலரடியில் சமர்ப்பித்தார். ஸ்ட்ரௌட்ஸ்பர்க் எப்படி புண்ணிய பூமி ஆனது? அங்குதான் ச்ருங்கேரி சாரதாபீடம் (அமெரிக்கக் கண்டத்தில்) அமைந்து அன்னை சாரதா தேவி அழகாகக் கொழுவீற்றிருக்கிறாள். அங்குதான் 1997 ஆகஸ்டு 22ஆம் தேதியிலிருந்து செப்டம்பர் 1ஆம் தேதிவரை வரலாறு காணாத வகையில் அமெரிக்காவில் முதன் முதலாக ஒரு அதிருத்ரமஹாயக்ஞம் நடைபெற்றது. இதற்கென இந்தியாவிலிருந்து குறிப்பாகத் தென்னாட்டிலிருந்து ருத்ரம் ஓதுவதிலும் மற்றும் பல ஆகம விதிகளிலும் கற்றுத் தேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட அந்தணர்கள் வரவழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். 11 நாட்கள் ருத்ரஜபம் வேத கோஷங்கள் பக்திமார்க்கச் சொற்பொழிவுகள் என்று விண்ணை நிறைத்தன. வேள்விக் குண்டங்களினின்றும் எழுந்த புனித அக்னி ஸ்ட்ரௌட்ஸ்பர்க்கை தூய்மைப்படுத்தியது. தினம்தோறும் ஆயிரமாயிரம் பக்தர்கள் வந்து வேள்வியில் கலந்துகொண்டு புண்ணியம் எய்தினர். வந்தோர்க் கெல்லாம் வாரி வழங்கியபடி அன்னதானம் அமர்க்களப்பட்டது. அற்புதமாக வேள்வி நடைபெற்றது. நம் குருஜியும் அந்த முக்கண்ணனின் மைந்தன் முருகனின் திருப்புகழ்பாடி பக்தர்களுக்கு இசைத்தேன் ஊட்டிப் பெருமை கண்டார். பக்தர்கள் பேருவகை எல்லை கடந்தது. ஸ்ட்ரௌட்ஸ்பர்க் மேலும் புண்ணியபூமி ஆகியது.

செப்டம்பர் 4ஆம் தேதி டெக்ஸஸ் மாநிலத்தில் ஆஸ்டினில் வசிக்கும் அன்பர்கள் குருஜியை அன்புடன் வரவேற்றனர். செப்டம்பர் 5ஆம் தேதி ஹயூஸ்டனில் ஆராதனை. செப்டம்பர் 6லிருந்து 10ஆம் தேதி வரை ஆஸ்டினில் அன்பர்கள் முன்னிலையில் திருப்புகழ் வழிபாடுகள் பிறகு கெனக்டிகெட்டில் தன் மகள் இல்லத்திற்குச் சென்றார்.

செப்டம்பர் 25ஆம் தேதி குருஜி இரண்டாவது முறையாக பால்டிமோர் சென்று 26ஆம் தேதி அங்கொரு புதிய வகுப்பையும் தொடங்கிவைத்து திருப்புகழ் அன்பர்களுக்கு ஆசிகள் வழங்கினார். அது பால்டிமோர் அன்பர்கள் செய்த பாக்கியம். 27ஆம் தேதி நாஷ்வில் என்ற இடத்தில் விநாயகப் பெருமான் சன்னதியில் ஆராதனை. அது கழிந்து மறுபடியும் சிகாகோ. சிகாகோவில் 29ஆம் தேதி லெமான்ட் ராமர் கோவிலில் முருகன் சன்னதியில் ப்ரஸாத்ராமசந்திரன் வயலின், விஜயராகவன் மிருதங்கம் என்று பக்கவாத்தியங்கள் அருமையாக அமைந்திட அற்புதமான ஒரு

திருப்புகழ் ஆராதனை குருஜி நடத்தினார். அக்டோபர் 4ஆம் தேதிவரை சிகாகோவில்தான். இங்கிருந்த நாட்களில் கந்தஷஷ்டி விழாவின் முக்கியமான ஒரு அங்கமாக விளங்கப் போகும் வள்ளிகல்யாண வைபவத்திற்கான முதற்கண் ஏற்பாடுகள் எல்லாம் செய்வித்து பாட்டுக்களின்தொகுப்பைக் கொடுத்து எங்களை ஊக்குவித்து விட்டு நுணுக்கமாக கோவிலில் ஏற்பாடுகளையும் விசாரித்தறிந்து கொண்டு நிகழ்ச்சிகள் எப்படி எப்படி அமைய வேண்டும் என்று ஒரு குறிப்பும் கொடுத்துவிட்டு சான்ப்ராஸிஸ்கோ சென்றார்.

அக்டோபர் 4லிருந்து 14ஆம் தேதிவரை சான்ப்ராஸிஸ்கோ. அக்டோபர் 5ஆம் தேதி கான்கோர்டு கோவிலில் ஒரு திருப்புகழ் ஆராதனை. அது கழிந்து பல அன்பர்கள் இல்லங்களில் திருப்புகழ் வகுப்புகளும் ஆராதனைகளும், அக்டோபர் 14ஆம் தேதி லாஸ்ஆஞ்சலிஸ் போய் 18ஆம் தேதி அங்கு நிறுவப்பெற்ற காஞ்சி காமகோடி மையத்தில் திருப்புகழ். 19ஆம் தேதி அதே இடத்தில் குருஜி தம்பதியினர் அபிராமிபதிகம் பாடினர். அது கழிந்து குருஜி கெனக்டிகட்டுக்குத் திரும்பினார்.

அக்டோபர் 31ஆம் தேதி அமெரிக்காவில் வேடிக்கையான ஹலோவீன் என்னும் பண்டிகை தினம். அன்று மாலை ஹலோவீனுக்காக தன் பேத்தி போட்டுக்கொண்ட வேடத்தைக் கண்டு களித்துவிட்டு இரவு விமானத்தைப் பிடித்து சிகாகோ வந்திறங்கினார்.

நவம்பர் 1ஆம் தேதி சிகாகோ அரோரா பாலாஜி கோவிலில் இளவல் கலைஞர் ஸ்ரீகாந்த் வெங்கட்ராமன் வயலின் திருவிஜய ராகவன் மிருதங்கம். இந்த பக்க வாத்யங்களுடன் குருஜி அற்புதமான ஒரு ஆராதனை நடத்தி எங்களைப் பக்திவெள்ளத்தில் ஆழ்த்தினார்.

நவம்பர் 2ஆம் தேதி டெட்ராய்ட் என்ற இடத்தில் கானடாவிலிருந்து திருப்புகழ் அன்பர்கள் வந்து அன்று நடந்த ஆராதனையில் பங்கு பெற்றனர். ரோகன் என்னும் 11 வயதுச் சிறுவன் குருஜி அவர்களுக்கு மிருதங்கம் வாசித்து ஆசிகள் பெற்றான்.

நவம்பர் 6ஆம் தேதி கந்தஷஷ்டி பாலாஜிகோவில் முருகனுக்குக் காலையில் வேதமுழக்கத்துடன் அபிஷேகம். அழகன் முருகன் ஆனந்தமாய் அபிஷேகத்தை ஏற்றுக்கொண்டான். அன்பர்களையும் குருஜியையும் கடாட்சித்தான். அலங்காரம் நடந்த சமயத்தில் குருஜியின் சிறு பஜனை. பிறகு சோடோபசாரங்களுடன் அருச்சனை மாலையிலும் அபிஷேகம் அலங்காரம் அருச்சனை எல்லாம் இரவு அன்பர்களுக்கெல்லாம் விருந்தளிக்கப்பட்டது.

7ஆம் தேதி மாலை விஷ்ணு சகஸ்ரநாமம் முடிந்தபின் அருணகிரிநாதர் பற்றி குருஜி ஒரு சிறு உரை ஆற்றினார். தடையின்றி வந்த கருத்துக்களை அன்பர்கள் கவனமாகக் கேட்டனர். திருப்புகழின் மேன்மையை மேலும் புரிந்துகொண்டனர். குருஜியின் உரை கருத்துக்களின் கோர்வையாக அமைந்தது.

நவம்பர் 8ஆம் தேத் சனிக்கிழமை நிகழ்ச்சிகள் மயம். காலையில் ஒரு அபிஷேகம் அலங்காரம் அருச்சனை எல்லாம். அது நண்பகல் கழிந்து 1 1/2 மணி அளவில் ஸ்ரீகாந்த் வெங்கட்ராமன் வயலின் கிருஷ்ணா பாலகிருஷ்ணா மிருதங்கம் பக்கவாத்யங்களுடன் குருஜி அவர்கள் திருப்புகழ் பாட்டுக்கள் பாட ஜானகி அவர்களுடன் நாங்களும் சேர்ந்து பாடிப்

பயன்பெற்றோம். பிறகு கந்தஷஷ்டி விழா மலர் வெளியீடு குருஜியின் கையால் கோவில் நிர்வாகப் பிரதிநிதியாக அன்பர் திருநாராயணன் அவர்களும், சுந்தர் அவர்களும் மலரை வாங்கிக்கொள்ள விழாவிற்கு வந்த அனைவருக்கும் மலர் வழங்கப்பட்டது. பிறகு 4 மணி அளவில் சூரசம்ஹாரம். வேலன் சூரபத்மன் உடலை வேல்கொண்டு கிழித்து பக்தர்களை ரட்சித்தான்: பக்திப்பரவசத்தில் ஆழ்த்தினான் போர்வெப்பம் தணிய உடன் அவனுக்கொரு அபிஷேகம் அது கழித்து ஒரு அற்புதமான அலங்காரம், அருச்சனை, சோடோபசாரங்கள் வேத முழக்கம், இசை நாட்டியம் என்று ஒன்றன்பின் ஒன்றாய் அற்புதமாய் குருஜி முன்னிலையில் அவர் மகிழ்வுறும் வகையில் நிகழ்ச்சிகள் நடந்தேறின. கோவிலில் வந்திருந்த அனைவருக்கும் விருந்தளிக்கப்பட்டது.

நவம்பர் 9ஆம் தேதி வள்ளிகல்யாணம் இனியதமிழிசையில் குருஜி அவர்கள் பாட அன்பர்கள் தொடர்ந்துபாட கட்டம் கட்டமாகத் திருமணம் நடைபெற்றது. கண்டவர்கள் களித்தனர். இதுபோல் விழா நடைபெற்றதில்லை என்று வந்திருந்தோர் எல்லோரும் ஒருமுகமாகச் சொல்லிச் சென்றது குருஜியின் ஆசியில் எங்களுக்குக் கிடைத்த பரிசு. அன்று மாலை குருஜியை கெனக்டிகட்டுக்கு விமானமேற்றிவிடச் சென்றோம். பிரியாவிடை சொன்னோம். குருஜியின் ஆசிகளை ஏற்றுக்கொண்டோம். விடைகொடுத்தோம் திரும்பிவந்து சேர்ந்தோம்.

ஒவ்வொரு ஆராதனை பயிற்சி வகுப்பு நிறைவுறும்போதும் "அஸதோமா ஸத்கமய; தமஸோமா ஜ்யோதிர்கமய; ம்ருத்யோமா அமிர்தம் கமய; ஓம் சாந்தி சாந்தி சாந்தி" என்று கண்களை மூடி அமைதியாகி சுருதி பெட்டி மூட ஒரு நிச்சலனமான அமைதியை நிலவவைத்து எங்களை அந்த அமைதியில் ஆழ்த்தி மனத்தில் ஒரு நிம்மதி ஏற்படுத்தியது எங்கள் பாக்கியம். அவர் செய்த வழிமுறையை இப்போது கடைப்பிடிக்கின்றோம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி:

# குருஜி அவர்களின் சிகாகோ விஜயம்

- தீ.ரா.வே. துரை

சிகாகோ கிளை புண்ணியம் செய்தது. அதனாலேயே 1997 செப்டம்பரில் குருஜி அவர்கள் சிகாகோவுக்கு வருகை தந்தது. அன்னவரின் நேர்முகப் பயிற்சியில் நவமணிகளென ஒன்பது திருப்புகழ் பாடல்கள் பயின்றது.

நவம்பர் 8ஆம் தேதியில் அரோரா வேங்கடமுடையான் திருக்கோவிலில் முருகன் சன்னதியில் சூரசம்ஹாரமும் அதைத் தொடர்ந்து 9ஆம் தேதி குருஜி அவர்களின் இயக்கத்தில் தமிழில் வள்ளி திருமணமும் நடத்தியது, பெருமிதமடைந்தது. இன்று சிகாகோ வாழ் தமிழன்பர்கள் மனத்தினிலே நிலையான இடம்பெற்று நல்லமுறையில் இயங்கிவருகிறது.

குருஜி அவர்கள் வருகை தர இசைந்தார் என்ற செய்தியைக் கேள்வியுற்றதும் கிளை அன்பர்கள் கொண்ட மகிழ்ச்சி எல்லைகடந்தது. கூடவே தயக்கமும் வந்தது. திருப்புகழை நாம் செவ்வனே பயின்று கொண்டோமா, குருஜியின் முன்னால் பிழையின்றிப் பாடிப் பெயர் பெறுவோமா என்று திருப்புகழ் பாக்களை ஆங்கிலத்தில் எழுதிப்படிப்பது கண்டு அவர்கள் பாடல்களை தமிழில் குற்றமற்றுப் பாட வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. தமிழைக் கசடற கற்ற நெப்ராஸ்கா விலிருந்த தன் நண்பர் செந்தமிழ் சிவநெறிச்செல்வர் ஆறுமுகம் (எப்படி ஆரம்பிக்கிறது, பாருங்கள்!) என்பவரின் நினைவு வந்தது. உடன் அவருடன் தொடர்பு கொண்டார், விருப்பத்தை விளக்கினார். அவரோ மகிழ்வுடன் "குமார குருபர" எனும் பாட்டை தமிழில் எழுதி அதன் உரையையும் எழுதி அனுப்பிவைத்து மேலும் திருப்புகழ் பாடல்களை குருஜியிடம் நேர்முகப்பயிற்சி பெற்றுத்தேர்ந்த திருமதி குமாரி லக்ஷ்மிநாராயணன் என்பவர் அப்போது அமெரிக்கா வந்திருப்பதாகவும், சிகாகோவுக்கு வருகை தர இருப்பதாகவும் கூறினார். சுந்தர் அவர்களும் சிகாகோ அரோரா பாலாஜி கோவிலில் திருமுருகன் சன்னதியில் திருமதி. குமாரி லக்ஷ்மிநாராயணன் அவர்களின் திருப்புகழ் பஜனை ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார். பஜனை நடந்தது. முப்பது பேர்கள் முன்னிலையில் அதனின்று கிடைத்தது இன்று எங்களுக்கு ஆசிரியைகளாகச் செயல்படும் பூர்ணா சேதுராமன், ராதா சிவகுமார் அவர்களும் இருவருமே குருஜி அவர்களின் வழியில் திருப்புகழ் கற்றவர்கள். கற்றுத்தர இரு ஆசிரியைகளுடன் சிகாகோ திருப்புகழ் அன்பர்கள் கிளை சிறிதாகத் துளிர்விட்டு படிப்படியாக வளர்ந்து இப்போது 20 குடும்பங்கள் அடங்கிய ஒரு கிளையாகச் செயல்படுகிறது. அன்பர்கள் கூட வேண்டும் என்றால் குறைந்தபட்சம் 20 மைல்கள் கார் பயணம். ஒன்றுவிட்ட வெள்ளிக்கிழமைகளில் குறிப்பிட்ட ஓர் அன்பரின் இல்லத்தில் இரவு 8 மணியிலிருந்து 9 மணி வரை பயிற்சி என்று ஏற்பாடு. அது கூட சில சமயங்களில் தள்ளிப்போட நேர்வதுண்டு. நவம்பர் முதல் மார்ச்சு மாதம் வரை குருதி உறையும் குளிர், பனிமழையெல்லாம் இத்தனை இக்கட்டுகளிலும் அன்பர்களை ஒன்று கூட்டி, ஈடுபடுத்தி திருப்புகழை இசையுடன் புகட்டி இன்முகத்துடன் செயல்படும். பூர்ணா சேதுராமன், ராதா சிவகுமார் எங்கள்அன்புக்கும் மதிப்பிற்கும் உரியவர்கள். எங்கள் அனைவரையும் கட்டுக்கோப்புடன் வைத்து குழு நன்கு இயங்கும் முறையில் எல்லா வகைகளிலும் முன்னின்று அயராது உழைப்பவர் எங்கள் சுந்தர். அமைதியான மனிதர். செயல்வீரர் குழு ஆரம்பித்தது அவரால்: இன்று நன்கு செயல்படுவதும் அவரால் அவருடைய நன்முயற்சியால்தானே குருஜியின் சிகாகோ விஜயம் வெற்றிகரமாக அமைந்தது!

ஜூன் மாதத்தொடக்கத்தில் இந்தியா சென்றிருந்த சுந்தருக்கு குருஜியுடன் தொலைபேசியில் பேச சந்தர்ப்பம் நேரிட்டது. குருஜி அமெரிக்காவர இசைந்து ஒரு விருப்பத்தையும் வெளியிட்டார். அதாவது சிகாகோகிளை அன்பர்கள் கந்தஷஷ்டி விழாவின் சமயம் இனிய இசையுடன் தமிழ்ப்பாடல்களில் வள்ளி திருமணம் நடத்த வேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்ததுமல்லாமல் அதற்கான பாடல்களை அடங்கிய ஒரு புத்தகத்தையும் கொடுத்து "ஒன்றுக்கும் கவலைப்படாதே, எல்லாம் அந்த செந்திலாண்டவன் பார்த்துப்பான்" என்று ஆசியும் கூறி அனுப்பினார். பிறகென்ன கவலை? சுந்தர் வந்து எங்களிடம் இதைச் சொன்னதும் நாங்கள் பரவசமானோம். முதற்கண் செயற்குழு ஒன்று ஏற்படுத்தினோம். பயிற்சியும், ஆராதனையும் தொடங்கியது. எவ்வளவு எளிதாக மனத்தில் பதியும்படி பாடலைப் பயிற்றுவிக்கிறார்! தாளகதி நன்கு புரிகிறது. பாட்டின்பொருளும் உட்கருத்தும் அவர் தெளிவாக எடுத்துரைக்க பாட்டு நமக்கு நன்றாய் விளங்குகிறது, மனத்தில் பதிகிறது.

ராதாசிவகுமார் இல்லத்தில் ஆராதனை, சிவகுமார் பற்றி ஒரு சிறிய குறிப்புபாடல்கள் மட்டுமல்ல அவைகளின் பக்க எண்ணும் மனப்பாடம். ஆகவே குருஜி பாட்டொன்றைத் தேர்வு செய்து சொல்லவும் சிவகுமார் பக்க எண் சொல்ல நாங்கள் புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு தயாராகிவிடுவோம். சிவகுமாரின் ஞாபகசக்தியைக் கண்டு குருஜி அவர்களுக்கு மகிழ்ச்சி கலந்த ஆச்சரியம்!

23ஆம் தேதி அலர்மேலு-சம்பத் தம்பதியரின் இல்லத்தில் ஆராதனையும் பயிற்சியும், "பூமாதுரமே" என்ற பந்துவராளி ராகமும் திஸ்ரதிருபுடைத்தாளத்திலும் அமைந்த பாடல் பயிற்சியில் இடம் பெறுகிறது. செவிக்குணவுக்குப் பின், சிறிதல்ல, பெரிதாகவே வயிற்றிற்கும் உணவு! 24ஆம் தேதி ஸ்வர்ணம் - ராமய்யா அவர்கள் இல்லத்தில், ஆராதனை அழகாக நடக்கிறது. அறுசுவை உண்டியும் கிடைக்கிறது!

25ஆம் தேதி அன்று குருஜி அவர்கள் இரண்டாவது முறை பால்டிமோர் சென்று 26ஆம் தேதி அங்கொரு புதிய வகுப்பைத் தொடங்கிவைத்து ஆசிகள் பல வழங்கி அங்கிருந்து நாஷ்வில் போய் 27ஆம் தேதி அங்கொரு ஆராதனை நடத்தி மகிழ்வித்து மறுபடியும் சிகாகோ வந்தடைகிறார்.

28ஆம் தேதி லெமாண்ட் (சிகாகோ) ராமர் கோவிலில் முருகன் சன்னதியில் குருஜி அவர்களின் திருப்புகழ் ஆராதனை ப்ரஸாத்ராமச்சந்திரன் வயலின், நாட்டியகலாலயத்திற்கு வந்திருந்த விஜயராகவன் அவர்கள் மிருதங்கள், அற்புதமாக அமைகிறது குருஜிஅவர்களின் ஆராதனை. கோவிலின் குருக்கள் சந்திரசேகர் அவர்களின்கைவண்ணத்தில் முருகனுக்கு ஒரு அலங்கரம், அக்ஷர சுத்தமாக அப்படியொரு அருச்சனை. ஆராதனை அனைவரின் மனத்தையும் பக்திமயமாக்குகிறது.

29ஆம் தேதி சுபத்ரா-ராமஸ்வாமி தம்பதியர் இல்லத்தில் "எருவாய், கருவாய்" (அமிர்தவர்ஷிணி, ஆதி) பாடல் பயிற்சியில் இடம் பெறுகிறது. பிறகு வழக்கம் போல் உணவு.

30ஆம் தேதி சீதா, கண்ணன் இல்லத்தில்-அங்கும் பயிற்சி ஆராதனை பின் உணவு எல்லாம்.

அக்டோபர் 1ஆம் தேதி அடியேன் இல்லத்தில் பயிற்சி, ஆராதனை "சரவணபவநிதி" என்ற பிருந்தாவன சாரங்கா ஆதிதாளம் 1/2 எடுப்பில் பாட்டு. பெரிய நிதியல்லவா கிடைத்தது! சொல்லிக்கொடுத்தவிதம் பாடியமுறை அப்படியே இன்றும் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது! அரோரா கோவில் அருச்சகர் கல்யாண சுந்தரம் செய்த அருச்சனையுடன் ஆராதனை இனிது நடந்தேறுகிறது. அன்பர்கள் அனைவரும் வந்திருந்து ஆராதனையில் பங்குகொண்டு முருகனின் அருள்பெற்று உணவருந்திச் செல்கின்றனர். குருஜியின் வருகை நாங்கள் பெற்ற பெரும் பேறு.

அக்டோபர் 2ஆம் தேதி உமா-ஸ்ரீநிவாசன் தம்பதிகள் இல்லத்தில் பயிற்சியும் ஆராதனையும் பிறகு உணவு. அக்டோபர் 3ம் தேதி வெள்ளிக்கிழமை ஸ்ரீநிவாசன்-சரோஜா தம்பதிகள் குருஜியின் பயிற்சியையும் ஆராதனையையும் வைத்துக் கொள்கின்றனர். அன்று நவராத்திரி வெள்ளிக் கிழமையும் கூட பெண்மணிகள் எல்லோரும் குருஜி அவர்களின் மனைவி ஜானகி அவர்களுக்கு மஞ்சள் குங்குமம் மற்றும் மங்கலப்பொருட்கள் கொடுத்து மரியாதைசெய்து மகிழ்கின்றனர். ஜானகி அவர்கள் அபிராமபட்டர் அருளிய அபிராமிபதிகத்திலிருந்து "சகல செல்வங்களும்" என்று தொடங்கும் தோத்திரப்பாடலைப்பாடி வாழ்த்துகிறார். அன்று இரவு விருந்தும் நன்றாய் இருந்தது என்பதைக் கூறவும் வேண்டுமோ! அக்டோபர் 4ம் தேதி மாலை கீதா-சடகோபன் தம்பதியர்கள் பெருமை பெறுகின்றனர். பயிற்சி நன்றாக நடக்கிறது. பேகடாராகம் அங்கதாளம் 11 அக்ஷரம் "ஒருபொழுது" என்ற பாடல். அது கழிந்து "வேழமுண்ட" என்ற பாடலுக்கு விளக்கம் சொல்லிவிட்டு 4 மணிஅளவில் சான்ஃப்ரான்ஸிஸ்கோ செல்கிறார்.

சிகாகோவில் இருந்த நாட்களில் கந்தஷஷ்டி விழாவின் முக்கிய அங்கமாக விளங்கப்போகும் வள்ளி திருமண வைபவத்திற்கான பூர்வாங்கமான ஏற்பாடுகளெல்லாம் செய்வித்து பாட்டுக்களின் தொகுப்பைக் கொடுத்து, எங்களுக்கு ஊக்கமளித்துவிட்டு சான்ஃப்ரான்ஸிஸ்கோ செல்கிறார். விழாவிற்கான ஏற்பாடுகளெல்லாம் நுணுக்கமாகக் கேட்டு சரிசெய்து கோவிலில் எப்படி எப்படி நிகழ்ச்சிகள் அமையவேண்டுமென்று ஒரு குறிப்பும் கொடுத்துவிட்டுத்தான்போகிறார்.

அக்டோபர் 5 கன்கோர்டுகோவிலில் ஒரு ஆராதனை. 18ஆம் தேதி லாஸ்ஆஞ்சலிஸ் காஞ்சிகாமகோடி மையத்தில் ஒரு பஜனை, 19ஆம் தேதி அதே இடத்தில் அபிராமி பதிகத்தோத்திரப் பாடல்கள் இவைகள் குறிப்பிடத்தக்கன.

20ஆம் தேதி கெனக்டிகட்டிகளின் இல்லத்திற்குப் போய்சேர்கிறார்.

அக்டோபர் 31ஆம் தேதி அமெரிக்கப்பண்டியையான ஹலோவீனுக்காக தன் பேத்தியின் விசித்திரமான உடை அலங்கார வேடத்தைக்கண்டு களித்து விட்டு சிகாகோவுக்கு இரவு வந்து சேர்கிறார்.

குருஜியின் சிகாகோ விஜயத்தின் இரண்டாம் பாகம் தொடங்கிவிட்டது. கிளையின் சரித்திரத்தில் நிலையான இடம்பெறப் போகிறது.

நவம்பர் 1 எங்கள் அரோரா பாலாஜி கோவிலில் தீபாவளி கொண்டாட்ட விசேஷ ஏற்பாடு திருப்புகழ் இசைவிழா தொடக்கம்.

குருஜியின் திருப்புகழ் ஆராதனை முருகனுக்கு. ஸ்ரீகாந்த் வெங்கட்ராமன் வயலின் (இளவல்கலைஞர்!) விஜயராகவன் மிருதங்கம். முருகனுக்கு குருஜி விருப்பப்படி ஒரு அற்புதமான விபூதி மிருதங்கம். முருகனுக்கு குருஜி விருப்பப்படி ஒரு அற்புதமான விபூதி அலங்காரம். முருகனை அப்படியே முன்னே கொண்டுவந்து நிறுத்திய ஒரு கலையை கல்யாண சுந்தர அருச்சகர் செய்திருக்கிறார்.

முருகனுக்கு குருஜி திருப்புகழில் பக்தி பூர்வமான ஒரு ஆராதனை ஆற்றுகிறார். வந்திருந்தவர்கள் அனைவரும் பக்திப் பரவசமெய்துகின்றனர். திருப்புகழ் ஆராதனை கழிந்து கோவிலில் ஏற்பாடு செய்திருந்த வாணவேடிக்கைகளைக் கண்டு களித்துச் செல்கின்றனர்.

நவம்பர் 2ஆம் தேதி டெட்ராய்ட்டில் திருப்புகழ் ஆராதனை டெட்ராய்ட் அன்பர்களுடன் கானடாவிலிருந்து திருப்புகழ் அன்பர்களும் வந்து கலந்து கொண்டனர். 11 வயது சிறுவன் ரோகன் கிருஷ்ணமூர்த்தி மிருதங்கம் வாசித்து குருஜியின் ஆசியைப் பெற்றுக் கொள்கிறான். அனைவரும் குருஜியுடன் பாடி மகிழ்கின்றனர்.

நவம்பர் 3லிருந்து சிகாகோவில்தான் ஸ்கந்தஷஷ்டியும் வள்ளி திருமணமும் நல்ல விதத்தில் நடைபெற வேண்டும் என்று அன்பர்கள் இதயங்களில் ஒருதுடிப்பு. அதற்காகத் தங்களைத் தயாராக்கிக் கொள்ளப் பரபரப்பாகின்றனர். குருஜி வள்ளி திருமண பாடல்களில் சீரிய பயிற்சி முகாம்களை நடத்துகிறார். பூர்ண சேதுராமன், ராதா சிவகுமார் விழா நன்றாக நடக்க வேண்டும் என்ற ஒரே நோக்கோடு தங்கள் சொந்தக்கவலைகளை உதறிவிட்டு வீட்டுப் பொறுப்புகளையும் குழந்தைகளையும் கணவர்களிடம் விட்டுவிட்டு சீரிய பயிற்சி செய்கின்றார். 'முயற்சி திருவினையாக்கும்' என்பது முதுமொழி உண்மையாகிறது. விழாவில் அவர்கள் பாடிய முறை

நவம்பர் 3இல் பூர்ணாவின் இல்லத்தில், 4ல் ப்ரியா பத்மநாதன் இல்லத்தில், 5ஆம்தேதி மறுபடியும் ராதாசிவகுமார் இல்லம் என்று பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.

நவம்பர் 6ஆம்தேதி முக்கியமான தினம். ஸ்கந்தஷஷ்டி. சாத்திரமுறைப்படி அபிஷேகம் முதலியன செய்ய கோவில் அருச்சகர்கள் கல்யாணசுந்தரம், நாகேந்த்ரா எல்லோரும் ஆயத்தமாகி நிற்கின்றனா். காலையில் விநாயகப் பெருமானுக்கு வணக்கம் செய்து விட்டு விழா ஆரம்பம் ஆகிறது. வருணஜபம் ஜபித்து அத்தனை நதிகள் நீரையும் ஆவாஹனம் செய்து புனித நீரால் ருத்ர ஜபத்துடன் முருகனுக்கு புனித நீராட்டுவிழா நடைபெறுகிறது. அதைத் தொடர்ந்து பாலாபிஷேகம், பஞ்சாமிர்த அபிஷேகம் என்று அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. பார்க்க இருகண்கள் போதுமா? போதவே போதாது. முருகன், அந்த அழகன் குருஜியை நோக்கி ஒரு புன்னகையுடன் நிற்கிறான். நீராட்டுகழிந்து அழகனுக்கு அழகான அலங்காரம் செய்ய அருச்சகர்கள் முற்படுகின்றனர். குருஜி திருப்புகழ் பாமாலை ஒன்று முருகனுக்குச் சூட்ட ஆரம்பிக்கிறார். திருப்புகழ் ஆராதனை அழகாக நடக்கிறது. பிறகு சோடோபசாரங்களுடன் அருச்சனை நடக்கிறது. மாலையிலும் ஒரு அபிஷேகம், ஓர் அற்புதமான அலங்காரம் அருச்சனை எல்லாம். அது கழிந்து பக்தர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது. 7ஆம் தேதி வேங்கடமுடையான் சன்னதியில் விஷ்ணு சகஸ்ரநாமம் முடிந்தபின் குருஜி அவர்கள் ஒரு சொற்பொழிவாற்றுகிறார். பொருள் அருணகிரிநாதர் மகனாக இனிக்கிறது பேச்சு. கருத்துக்களாக

அமைகிறது அந்த உரை. திருப்புகழின் மேன்மையை வெகுவாக அந்த நல்லுரை உணர்த்துகிறது.

நவம்பர் 8ஆம் தேதி சனிக்கிழமை ஸ்கந்தஷஷ்டி விழா. முருகனுக்கு அபிஷேகம் அலங்காரம் காலையில், நண்பகல் உணவுக்குப் பின் குருஜியின் சிறு ஆராதனை. ஜானகி அவர்கள் உடன்பாட அன்பர்கள் நாங்கள் உடன் பாடுகிறோம். ஸ்ரீகாந்த் வெங்கட்ராமன் வயலினும் கிருஷ்ணபாலகிருஷ்ணா மிருதங்கம். அது கழிந்து மலர் வெளியீட்டுவிழா. வள்ளி திருமண விழாவுக்கெனத் தயாரித்த மலர். அழகான வண்ணக் காகிதத்தில் வள்ளி தெய்வானையுடன் கூடி அரோரா வாழ் ஆறுமுகனின் படத்தை மேலட்டையில் நல்ல முறையில் அச்சடித்து, உள்ளே வினாயகப் பெருமானின் படம் ஒன்றையும் போட்டு, பின் அட்டையில் வள்ளி திருமணக் காட்சியையும் போட்டு இவையுடன் பொருள் பொதிந்த கட்டுரைகள் திருப்புகழ் பாடல்கள் சில இவற்றையும் சுந்தரும், ஸ்ரீநிவாசன் அவர்களும் தொகுத்து அச்சிட்டுத்தந்த மலர். மலரை குருஜியிடம் சமர்ப்பித்து மலரை வெளியிடுமாறு வேண்டுகிறோம். மலரைப் பிரித்து பார்க்கிறார் குருஜி. மனநிறைவு புன்னகையில் தெரிகிறது. சுந்தரையும் நாராயணன் அவர்களையும் முதலில் அழைத்து மலர்களைக் கொடுக்க, பிறகு வந்திருந்த மற்றவர்களும் பக்தியுடன் மலரை வாங்கிக் கொள்கின்றனர்.

மாலை 4 மணி அளவில் சூரசம்ஹாரம். சூரன் முருகன் முன் வந்து நிற்கிறான். அழகன் சிரிக்கிறான். சூரன் வெகுள்கிறான். கொதிக்கிறான். போர் செய்து களைக்கிறான். முருகன் வேல்கொண்டு அவன் உடலைச் சிதைக்கிறான். சூரன் சரிகிறான். இருபிளவாகிறான். ஒரு பாதியை மயிலாகவும் மறுபாதியை சேவலாகவும் மாற்றி ஏற்றிக்கொண்டு சூரனுக்கு வேல்முருகன் அருள் தந்து ஆட்கொள்கிறான். அன்பர்கள் ஆர்ப்பரிக்கின்றனர். அதன் பின்னர் போர் வெப்பம் தணிந்திட அழகனுக்கு அபிஷேகம். அவன் அருள் பெற அன்பர்கள் ஷஷ்டி கவசம் பாடுகின்றனர். குருஜியுடன்தான். பிறகு தெய்வானைப் பிராட்டியை மணமுடித்து மகிழ்கின்றனர். கோவில் அருச்சகர்கள் அனைவரும் அனைத்து காரியங்களையும் செவ்வனே செய்து ஒரு ஷண்முக அருச்சனையும் செய்கின்றனர், அற்புதமாக.

மணவிழாவில் நடன நிகழ்ச்சியாக "வேலனே! முக்கண்ணன் உமை பாலனே" என்ற பாடலுக்கு கணபதி ராமசுவாமி, அபர்ணா வேமுரி, கவிதா ராமகிருஷ்ணன் என்ற குழந்தைகள் அற்புதமாக நடனம் ஆடினர். கோவில் நிர்வாகம் திருமண விருந்து படைக்கிறது. வந்தவர்கள் கண்டனர், களித்தனர், சென்றனர்.

நவம்பர் 9ஆம் தேதி வள்ளி திருமண விழா நாள். சிகாகோ வாழ் தமிழ், அன்பர்கள் அனைவரும் ஆவலுடன் காத்திருந்த நன்னாள்.

விநாயகருக்கு வணக்கம் செலுத்தி குருஜி மணவிழாவை தொடங்கிவைக்கிறார். வேழமுகத்தான்தானே இந்த மணவிழாவிற்கே காரணம் ஐந்து கரத்தான் ஆசி கூறுகிறான். குருஜி அவர்களும் ஜானகி அவர்களும் சிவரஞ்சனி ராகத்தில் வேலனை மணவிழா மண்டபத்துக்கு 'வள்ளியை மணம் புரிய வாவா' என்றழைக்கின்றனர். அன்பர்கள் குழு அவர்களுடன் சேர்ந்து அண்ணலை அ[illegible]ன் நாமாவளி சொல்லி அழைக்கின்றனர்.

அன்பர்கள் வேலன் மகளை மணக்க இருக்கும் வேலனை தோளிலே தூக்கி குருஜியின்

பாட்டுக்கு இசைந்தபடி அசைந்தாடி மண்டபத்துக்கு வருகின்றனர். வள்ளிப் பிராட்டியைத் தாங்கியபடி பெண்வீட்டார் எதிரில் நிற்கின்றனர். 22 பாடல்களில் முருகனுக்கு வரவேற்பு அளித்து குருஜி அவர்கள் அவையினரை மெய் மறக்கச் செய்கிறார். தேனாகப் பாய்கிறது தமிழிசை. ஆனந்தமாய் கேட்டுக்களிக்கின்றனர் அவையோர்.

அடுத்த கட்டமாக முருகன் - வள்ளி அறிமுகம்! ஆம் "எழுதரிய அறுமுகம் மணிநுதலும்" என்று எங்கள் அழகிய குமரனை அறிமுகப்படுத்துவது பொருத்தம் தானே! குருஜி அவர்கள் பாடுகிறார். "வினைப்பகை செகுப்பவன் என் திருத்தணி மலைக்கிறைவன். "வினைப்பகை செகுப்பவன் என் திருத்தணி மலைக் கிறைவன்" என்று குமரன் புகழ் பாடி மகிழ்கிறார். வள்ளிப்பிராட்டியின் அறிமுகம் தொடர்கிறது. "செம்பொன்நூபுர கமலமும்" என்று தொடங்கி "வேகச்சொருபி" "அரிய வேடச் சிறுமி" என்று வள்ளி புகழ் பாடி வள்ளிப் பிராட்டியின் மென்மையையும் மேன்மையையும் உணர்த்துகிறார் குருஜி. பரவசம், பரவசம் ஆனந்தப் பரவசம்.

நாணத்துடன் நளினமாக நிற்கிறாள் வள்ளிநாயகி மாலை மாற்ற புன்னகையுடன் பெருமை பொங்க நிற்கிறான் வேலன். குருஜி அவர்கள் தொடங்க மற்றவர்கள் சேர்ந்து கொள்ள மாலை மாற்றும் பாடல்கள் திலங்ராகத்தில் இசைத்தேன் வெள்ளம் பாய்கிறது. வள்ளி மாலையிடுகிறாள். மனமுவந்து ஏற்றுக்கொள்கிறான் மால்மருகன் அண்ணலும் அணிவிக்கிறான். அவளும் ஏற்றுக்கொள்கிறாள். இடைஇடையே முருகன் வெடுக்கென்று பின்னால் போகிறான். விளையாட்டாக விடாமல் மாலை அணிவிக்கிறாள் வள்ளியும். பிறகு வள்ளி குதித்துக் கொண்டு பின் செல்லவிடாமல் மாலை அணிவிக்கிறான் வேலன். மாலை மாற்றும் கோலாகலமாகக் கழிந்து பூப்பந்து விளையாடி பக்தர்கள் அனைவரையும் பரவசப்படுத்துகிறார்கள் மணமக்கள். என்னே கண்கொள்ளாக்காட்சி!

வேலனும் வள்ளியும் ஊஞ்சலாடுகின்றனர். குருஜி அற்புதமாக "அரகரசிவாய" என்று ஆரம்பித்து ஊஞ்சல்பாட்டுகள் 10 பாக்கள் பாடி கன்னூஞ்சல் என்று மற்றொரு 10 பாக்கள் பாடி ஊஞ்சல் காட்சி கண்களில் நிறைகிறது. குருஜியின் பாட்டு காதுகளில் தேனாக ஒலிக்கிறது.

கல்யாண ஆரம்ப வைபவப் பாட்டுக்கள் பாடி முருகனின் புகழ் பறைசாற்ற குருஜி "மேனை அரிவைக்குரிய பேரன்" என்று முருகன் புகழ் பாடுகிறார். பக்தர்கள் பக்தி சிரத்தையுடன் கேட்கின்றனர். "நாராயணன் மருகன்" என்று முடிக்க "ஆரணற்கு மறைதேடியிட்ட.....சுந்தரவல்லி" என்று தொடங்கி குருஜி வள்ளியின் மேன்மை விளக்குகிறார். வடமொழியில் "சதுர்வேத சாகாத்யாயினே என்பது முதல் ஸ்ரீசுப்ரமண்யவர்மனே என்று மற்றும் முருகனின் புகழ்பாடி "நம்பிராஜ ஸங்கல்பதனயாம் ஸ்ரீவல்லி நாம்னீம் இமாம் கன்யாம்" என்று குருஜி முடிக்க கூடிஇருக்கும் பக்தர்களுக்கு மெய்சிலிர்க்கிறது.

கன்னிகாதானம் "தாஸ்யாமிஸ்கந்த வேதுப்யம் என்று வள்ளியை குருஜி கந்தனுக்கு அர்ப்பணித்து" வனசரர் கொடிச்சிதனை யாசித்த வேலனுக்கு ஹரஹரோஹரா' என்று வெற்றிவேல் முருகனுக்கு வாழ்த்துக்கள் வழங்குகிறார் குருஜி. கன்னிகாதானம் கழிந்து மணமகளுக்குக் கூறை அளிக்கிறார் "நவோ நவோ" புத்ரானா தேகி பதிமேகாதஸம் க்ருதி" என்று சொல்லி பட்டாடையை வள்ளி அணிந்து மங்கல நாண் பூட்டிக்கொள்ளத் தயாராக வரும்படி சொல்கிறார்.

பக்தர்கள் நெருக்கியடித்துக் கொண்டு நிற்கின்றனர். வள்ளி மறைவிடத்தில் கூறைப்புடவையை அணிந்து கொண்டு கூடத்துக்கு வருகிறாள். கண்களில் நிறைகிறது அந்தக் காட்சி. வேலன் தயாராக மங்கல நாண் கையில் கொண்டு அருச்சகர்கள் அருள்மொழி சொல்ல "மாங்கல்யம் தந்து நாநேநா என்று முருகன் வள்ளிக்கு மங்கல நாண் பூட்டுகிறான் கெட்டிமேளம் கெட்டிமேளம்!! வெற்றி வேல் முருகனுக்கு ஹரஹரரோஹரா என்று பக்தர்கள் போடும் கோஷம் விண்ணை எதிர்க்கிறது. மலர்கள் சொரிகின்றன பக்தர்கள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் நிறைகிறது.

பாணிக்கிரணத்தைத் தொடர்ந்து ஸப்தபதியும் நடந்து அது முடிந்து குருஜியும் சீடர்களும் காஞ்சி, திருவானைக்கா, அருணை, காள ஹஸ்தி சிதம்பரம் வள்ளிமலை, சோலைமலை என்ற திருத்தலங்களின் திருப்புகழ்பாக்களை பாடிப்பாடி அன்பர்களைப் பக்தி வெள்ளத்தில் ஆக்குகின்றனர்.

திருமண விழாவில் ஆசிர்வாதம் தொடர்கிறது. சிந்துபைரவியில் "வேல் முருகா என்று குருஜி வாழ்த்துப் பாக்கைளைத் துவக்க, மற்றவர்களும் சேர்ந்து பாடி இசை மழையாய் பொழிகின்றனர். வாழி வாழி என வாழ்த்தி "புன் மறத்தியை தழுவு பொற்புயத் திருமார்பா" என வாழ்த்தி திருமணம் நிறைவு பெறுகிறது.

அனுபூதி தொடர்கிறது. குருஜி அவர்களுடன் அன்பர்கள் அனைவரும் பக்திப் பரவசத்தோடு பாடுகின்றனர். பிறகு ஆராதனை அதாவது 108 திருப்புகழ் வரிசையில் அருச்சனை வேத உபசாரங்கள் அருச்சகர்கள் நான்கு வேதங்களும் திராவிட வேதமாக திருப்புகழ் ஒன்றை ஓர் அன்பர் பாடுகிறார்.

வேலன் திருமண விழாவில் இசை, கலை நிகழ்ச்சிகளுக்கா பஞ்சம்! இசைகானம் பொழிகிறது. ஒரு அன்பர் வாயிலாக ஸ்ரீகாந்த் வெங்கட்ராமன் வயலின் வாசிக்கிறார். அன்பர்கள் அமைதியுடன் கேட்டு ரசிக்கின்றனர்.

பிறகு பரதம். நல்லதொரு பரதத்தை தீபா, ரேகா ரங்காச்சாரி அழகாக ஆடுகிறார்கள். பக்தர்கள் கை கொட்டி ஆர்ப்பரிக்கின்றனர். அன்பர்கள் பேச்சற்று அசையாமல் இருக்கின்றனர். அமைதி அமைதி பரிபூரண மன நிம்மதிபெறும் அமைதி!! அன்பர்களும் கண்மூடி பிரார்த்தனை செய்கின்றனர்.

மெதுவாக குருஜி அவர்கள் தியான நிலையிலிருந்து மீண்டும் வெளி உலகுக்கு வருகிறார். கூடி இருக்கும் அன்பர்கள் அனைவரையும் பார்த்துப் புன்னகை புரிகிறார். வள்ளி திருமணவிழாவை வெற்றிகரமாக நடத்தித் தந்துவிட்ட களிப்பு கண்களில் ஒளிர்கின்றது. அன்பர்கள் எங்களுக்கு ஒரே ஆனந்தம்.

கோவில் நிர்வாகத்தின் பிரதிநிதியாக எங்கள் அன்பர் நாராயணன் முன்னால் வருகிறார். அவரும், அவர் மனைவி தரணி அவர்களும் சிறந்த முருக பக்தர்கள். கோயிலுக்கு விடாது தொண்டு செய்பவர்கள்.

நாராயணன் அவர்கள் குருஜி அவர்களைப் பார்த்து பேச ஆரம்பிக்கிறார்கள். நன்றி உணர்ச்சியில் அவர் நா தழுதழுக்கிறது.

நாராயணன் தம்பதியாரை முன்னே வருமபடி மொழிகிறார் எதிர் மரியாதை செய்ய! முன்னமே தயாராக எடுத்து வைத்திருந்த பட்டாடைகளை அளித்து ஆசி கூறுகிறார். நாராயணன் தம்பதியர் பணிவன்புடன் ஆசிகளை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

கடைசிக் கட்டமாக அடியேன் நன்றி சொல்ல திருவிழாவுக்கு வந்திருந்த அன்பர்கள் மணவிழாவிருந்துக்கு விழைகின்றனர். அறுசுவை உண்டி கிளையின் பெண் உறுப்பினர்கள் பக்குவமாக ஆக்கிவைத்திருக்கின்றனர். வந்திருந்தவர் யாரும் வயிறார விருந்துண்டு செல்கின்றனர்.

அன்று மாலையே குருஜி அவர்களும், ஜானகி அவர்களும் கெனக்டிகட்டிற்கு திரும்பவேண்டும். இந்தியா திரும்புமுன் மகள், மருமகன், குழந்தைகளுடன் இருந்து களிக்க! குருஜியும் ஜானகி அவர்களும் அங்கிருந்தோரிடம் விடை பெறுகிறார். எல்லோருக்கும் கண்களில் நீர் நிறைகிறது. சுந்தர், லலிதா இல்லத்திற்கு சென்று அங்கிருந்து விமான நிலையத்திற்கு புறப்படுகிறார்கள்.

ஆறுமுகமங்கலத்திலே பிறந்து அந்த ஆறுமுகனையே வழிபட்டு தனது நோய்க்கு ஒரு வழி கண்டு, அன்று அருணகிரியார் செய்து விட்டுப் போன திருப்புகழ் என்னும் பாடல்களுக்கு அவனூடே இழைந்தோடும் சந்தங்கள் சிறக்க இசையமைத்து இன்று உலகெங்கும் பரந்து வசிக்கும் தமிழ் மக்கள் பாடி இன்புற்று அந்த இறைவனடி நாட வழிசெய்து அதற்காகவே தன் வாழ்நாள் முழுவதும் உழைத்து இன்று 71 வயதை எட்டிப்பிடித்து இன்னும் திருப்புகழைப் பாடி பரப்பிவரும் குருஜி, நீர் வாழி வாழி பல்லாண்டு வாழி என்று வாழ்த்தி வணங்குகிறோம்.

❄

# A NOTE FROM A TIRUPPUGAZH ANBAR

**Mrs. SETHULAKSHMI : Canada**

I think it was in 1967 that my husband, the late Sri P. Ramaswamy, (a well known journalist) and I attended a tiruppugazh bhajan in Sri. T.M. Subramanian's (T.M.S) house. We lived in the same colony Bharati Nagar but were not acquainted with each other. A friend of ours, Sri Adisesha Iyer was staying with us. He was a Tamil poet and had composed a number of songs on Lord Muruga which were very popular and sung by concern artists. He was also an ardent devotee of tiruppugazh and had conducted tiruppugazh bhajans regularly in his home-town Salem. He later took to the ochre robe and became Swami Guhananda.

A tiruppugazh bhajan in homage to the late Sri Tiruppugazh Mani of Madras who was one of the earliest to propagate the sonegs of Arunagiri Nathar, the fifteenth century saint-composer of these immortal songs, was being held at T.M.S.'s house. Adisesha Iyer wanted my husband to come with him to the bhajan, but my husband pleaded his ignorance of the Tamil language as he knew only malayalam and declined. Adisesha Iyer then changed his tactics and said that there was no need to know the language as the musical quality of the bhajans would be so exellent that once we heard it we would not miss a single bhajan. Since we were very fond of music we went to the bhajan. Sri A.S. Raghavan or 'Guruji' as he is reverently addressed, was conductging the bhajan. It was melodious and enthrallig. It didn't matter that we did not fully grasp the meaning of the songs-the music moed us to tears.

Writing this note from Toronto,, Canada, where I am visiting my daughter, I attended the Vishaka bhajan and a tiruppugazh class conducted by Mrs. Tara Krishnan. She has been holding up the tiruppugazh banner here in Toronto. Even with a very busy work schedule people manage to find the time to attend classes, and all the important festivals bhajans like Krittigai, Sasti, Visakam and Thai Poosam, hosted at the homes of the Anbargal, are very well attended. I was happy to see many of the younger generation participating.

Forty years ago, this movement had a nucleous of ten to fifteen members in Delhi. It grew from strength to strength and people who came for the first time for a bhajan, stayed on.

Anyone who has attended the tiruppugazh bhajans of those times would have known Sri. Ramand Easwaran and Sri. K.P. Narayanan both of whom are no more amidst us. Sri Ramnad Easwaran, an eminent concert mridagist was from the very beginning associated wutg Guruji and always provided the percussion accompaniment for the bhajans. Sri. K.P. Narayanan was a brilliant harmonium player and gave support on the harmonium at the tiruppugazh bhajans. altogether they made a great team.

Thus this movement is now a global movement taking the message of tiruppugazh to many parts of the world. It is a one man's achievement setting these songs to melodious tunes in all ragas with the chanda talas neatly set to count beats-Sri. A.S. Raghavan.

# THE GREAT IMPACT

**SULOCHANA KRISHNAMURTHY** : Canada

Most of us, the Thiruppugazh Anbargal of Greater Toronto, emigrated to Canada in our early 20's, some 25 years ago. This country, though provided us with intellectual fulfillment and career satisfaction, left us yearning for something more-a devotional expression and experience perhaps-among other things. Our children had to grow up without the influences of an extended family and in a society devoid of traditional Indian Dharma. Everything started to fall in place, as if by divine grace, by early 1980s. A prime disciple of our revered Guruji, Mrs. Tara Krishnan landed on our soil and that marked a definite turning point in our lives and of our children.

I think I found my reply in 1988, when we had the privilege of meeting and bonding with our "guruji". The very first bajan we participated with him, was an experience in itself. We sat there awe struck, choking with inexplicabl emotions. It wasthen that I realized, what Thiruppugazh meant to me. There I saw Guruji, in all his ecstasy, face to face with Lord Muruga, speaking to Him, pleading with Him, chiding Him and even playing with Him. I started understanding the meaning of many phrases in Thiruppugazh as delineated so discernibly by our Guruji. I started marveling the mastery of the immense work by Shri. Arunagirinathar and the message "Avirodha" as conveyed by the saint and so well elucidated by our Guruji.


What we are today, is one happy congenial family - Thiruppugazh Anbargal family. The ripple effect of Thiruppugazh on our children are many, some subtle and some more obvious. On the obvious side, some children are many, some subtle and some more obvious. On the obvious side, some children have worked diligently and learnt to read Tamil. Some are the next successors to Tara Mami, singing with perfect diction and dedication. Most of the 70 copies of the English transliteration of Thiruppugazh, published by the "Thiruppugazh

Anbargal of Toronto" in 1996, are in use among our children. On the obvious side, the children who do not participate directly in singing, enjoy the love and care showered on them by the family, the social life and the security. They hae a very firm moral and ethical rooting, sown by association and motivation.


Going back to Guruji's visit in 1988, we were not only just mesmerized by his bajans, but the trips we took with him and the classeshe had conducted for usand the children were all experiences we treasure forever. His second visit in 1991 to Toronto was equally memorable and the children to this day cherish the memories. Though we were able to attend only a few bajans during his latest trip to USA, it was very fulfilling and reinforced our bonds.

On this very special occasion of his birthday, I join all the Thiruppugazh anbargal of greater Toronto, to wish Guruji, Smt. Janaki Raghavan and their family a very long life, good health and prosperity.

❄




Guruji Sri Raghavan Blessed by
Swami Chidananda Maharaj of Swami
Sivananda Ashramam Rishikesh.


SEKAR
AUDIO
NS-4

